# தென்மொழி



சுவடி: 8.

ஓலை: 4.

விலை

75 காசு.

## தன்னுட்சி வேண்டும்.

பெற்றுவிட வேண்டும்—தமிழகம்
பெற்றுவிட வேண்டும்—தன்னுட்சி
பெற்றுவிட வேண்டும்!

முற்றும் நினைத்தே உரைக்கும் உரையிது!
முழுமையாய் என்றைக்கும் மாற்றம் இலாதது! -(பெற்று

ஒற்றுமை ஒற்றுமை என்பதால் யார்க்கும்
உருவான பயனென்ன? யார்க்கது ஏற்கும்?
வெற்று நினைப்பினில் வாழ்ந்திட லாமோ?
விலகுதல் பகையெனப் பொருள்கொள்ள லாமோ? -(பெற்று

கற்றும் கல்லாதவர் போல்,இந்த நாட்டில்
கணக்கிலா மதங்களும் குலங்களும் கொண்டோம்!
தொற்றும் பிணிகளைப் போல்மூடப் பழக்கம்;
தொலையாத போராட்டம்; ஓயாத தொல்லை! -(பெற்று

தில்லிக்குப் போவதும் வருவதும் ஒன்றே
தெற்கினில் உள்ள அமைச்சர்கள் வேலை!
மல்லிக்குச் சுக்கொன்று வேண்டுவ தென்றால்
மாதங்கள், ஆண்டுகள் காத்திடல் நன்றே? -(பெற்று

வடக்கிலோ மேன்மேலும் அதிகார வீக்கம்;
வருமான வீழ்ச்சியோ தெற்கினைத் தாக்கும்!
இடக்குசெய் இந்தியும் இடைஇடைத் தொல்லை!
எத்தனை நாளைக்கோ இத்துன்ப எல்லை? -(பெற்று

நாளுக்கு நாள்,ஏழை நலிவையே கண்டான்;
நாடாளும் பதவிகள் பணக்காரன் கொண்டான்;
தோளுக்குச் சுமைமேலும் மிகுகின்ற போதில்
தொந்திக்கு விருந்திசை கேட்கின்றோம் காதில்! -(பெற்று

உழைப்பவர் வாழ்க்கையில் துயர்காணல் நன்றோ?
உயர்வான திட்டங்கள் செயலாதல் என்றோ?
பிழைப்பெல்லாம் செல்வர்க்கே! பேச்சென்ன பேச்சோ?
பிறநாட்டில் கையேந்தும் வாழ்வென்ன வாழ்வோ? -(பெற்று

இராப்பகல் உழைப்பவன் சாகின்றான் நாட்டில்;
ஏய்ப்பவன் துய்க்கின்றான் உயர்மாடி வீட்டில்!
வராப்பயன் வந்ததாய் முழங்குகின் றீர்கள்;
வாய்ச்சொல்லால் முழக்கத்தால் என்னகண் டீர்கள்? -(பெ

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7424

# நமக்கு வந்த மடல்கள்.

**0 203:** அன்புள்ள அய்யா,

தென்மொழி சுவடி: 8. ஓலை: 1, 2, 3 படித்தேன். படிக்க வாய்ப் பளித்தஇடம்: மதுரை மாவட்டக் கிளை நூலகம், தெற்குவாசல், மதுரை. தனித்தமிழ் என்று பழைய (வழக்கொழிந்த) தமிழைப் போற்றும் தாங்கள் விடுதலை ஈ. வெ. ரா. பெரியாரைப்போல் (லை = லை) தங்கள் இதழை அச்சிடாதது ஏன்?

தமிழ் இலக்கணத்தில் ஒரு பிரிவாகத் திசைச் சொற்கள் இருக் கும் போது பிறமொழிக் கலப்பால் கன்னித் தமிழ் கேடுறுமா? போற் றலையும் தூற்றலையும் தாங்கிவரும் மடல்களையும் நடுநிலை நின்று வெளியிடும் தங்கள் பண்பைப் பாராட்டுகிறேன்.

—ச. ம. முத்து, மதுரை-1.

**0 204:** அன்பார்ந்த தமிழ்ப் பெரியீர், வணக்கம்,

இத்துடன் உருபா இரண்டு அனுப்பியுள்ளேன். அவற்றைத்தென் மொழிக்கென சிறு நன்கொடையாக ஏற்றுக்கொள்க. தொகை சிறிய தாயினும் தென்மொழி வளர்ச்சியில் என் ஆவல் பெரியது. ஆகவே திங்கள்தோறும் இதுபோன்ற என்னலியன்ற தொகையைத் தென் மொழிக்கென விடுப்பேன். தமிழ் நலமொன்றே கருதி, அல்லும் பக லும் உழைக்கும் தங்கள் உள்ளத்திறம் என்னை வியப்படையச் செய் கிறது. இந்த இரண்டுங்கெட்டான் தமிழ்க் குமுகாயத்தை நம்பித் தங்கள் தனிவாழ்வின் உயர்வைக்கூடக் கருதாது தொண்டாற்றும் தங்கட்கு இந்தத் தமிழ்க் குமுகாயமும் மக்களும் என்ன கைம்மாறு செய்யப் போகின்றனரோ? தெரியவில்லை. தாங்கள் அத்தகைய கைம் மாறு எதனையும் எதிர்பார்க்கவில்லை என்பதை அறிவேன். எனினும் இனத்தாழ்வினின்று தங்களை மீட்டுக்கொள்ளவாவது அவர்கள் திறம் பெற்றால் தங்கள் உழைப்புக்கு பயன் உண்டு.

பெரியார் ஈ. வே. ரா. முதல் அறிஞர் அண்ணா வரை முயன்றும் திருத்த முடியாத கேடுகெட்ட குமுகாயம் இது. வல்லடிமைத்தனம் தலைக்கேறி, வளையாத உடலுறம் வளைந்துவிட்ட நேரமிது. இந்நேரத் தில் தாங்கள் தமிழ்த்தொண்டாற்ற முனைந்துள்ளீர்கள். தங்கட்கு எங்கள் துணை என்றும் உண்டு. நேரிய போக்கும் நெஞ்சுரமும் சீரிய தொண்டுள்ளமும், செயலாற்றும் திறமும், இப்போதைக்குத் தங்களி டம் மட்டுமே நிறைந்திருப்பதாக, என்போன்ற தமிழ் நெஞ்சங்கள் நம்பவேண்டியிருக்கிறது. அந்த நம்பிக்கை என்றும் வீண் போகாது. ஆகவே செயலாற்றுங்கள். உங்கட்குத் துணைநிற்க ஆயிரமாயிரம் தமிழ்க் காளைகள் இங்கு அணியமாகிக் கொண்டிருக்கின்றன.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு.

—வீர. செல்லக்கண்ணு, கோவை-2.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7424

B. RAMASWAMY,
BOOK STALL.
71, B. B. Street,
Near Royal Theatre,
Coimbatore-1.



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி:8 ஓலை: 4.

(விடை, தி. பி. உ00க- மே, சூன்.-1970)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழியின் அச்சகம், கடலூர்-1.

# இராசாசியின் திசை மாற்றம்



நடுவணரசில் ஏற்பட்ட கட்சிக்குலைவுகளுக்கும் பின், இந்தியாவிலும் தமிழகத்திலும் அரசியலே திசைதிரும்பிப் போயிருக்கின்றது. 67-இல் இருந்த திரு. இராசாசி தம் முகத்தை எதிர்த்திசையில் திருப்பியிருக்கின்றார். தமிழக அரசியலில் திரு. காமராசரின் காலடியே படக்கூடாதென்றும், இந்திய அரசியலில் அவரின் குரலோசையே எடுபடக் கூடாதென்றும் உறுதிபூண்டிருந்த 20-ஆம் நூற்றாண்டுச் சாணக்கியரின் கைகள் திரு. காமராசரின் தோள்களைத் தழுவத் தொடங்கியுள்ளன. அவரின் கண்ணசைவுக்குக் காத்திருந்த ஆரிய ஏடுகள், தங்கள் கைகளை முடுக்கமாக அசைக்கத் தொடங்கியுள்ளன. காமராசரின் 'இந்தியாவைக் காப்போம்' என்ற குரலொலியிலேயே தம்முடைய அரசியல் வீழ்ச்சியைப் புதைத்துக்கொண்டு, தம் உருவத்தை மீண்டும் பட்டை தீட்டிக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தில்

www.thamizham.net - Free E book No 7424

இராசாசி என்னும் அரசியல் நரி மீண்டும் எழுந்து உலாவரத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்ட பார்ப்பனத் தாளிகைகள் அனைத்தும் தங்கள் இனத்தின் மூலவரை எப்படியாவது முன்னுக்குத்தள்ளி விட்டுவிட வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன். போட்டி போட்டுக்கொண்டு அவரின் படங்களைப் பெரிது பெரிதாக வெளியிடுவதும், அவர் 'சுயராச்சியாவில், எழுதும் துண்டு துக்கடாக்களை ஏதோ கண்ணன் பாண்டவர்களுக்குக் கூறியதாகவுள்ள 'கீதை' மொழிகளைப்போல் கட்டங்கள் கட்டிப் போடுவதும், அவர் 'மூக்கைச் சிந்தினார்' 'எச்சில் துப்பினார்' 'தலையைச் சொரிந்தார்' என்று பலபட எழுதி விளம்பரப்படுத்துவதுமாகத் தங்கள் இன அரிப்புகளைத் தீர்த்துக் கொண்டு வருகின்றன. இத்தகைய அரசியல் சந்தடிகளுக்கிடையிலும் எங்கே 'காமராசரின் பின்னால் இராசாசி போனார்' என்ற இழிபெயர் ஏற்பட்டு விடுமோ என்று எச்சரிக்கையாக, 'இராசாசி காமராசரை மீண்டும் அரசியல் மாணவனாக ஏற்றுக்கொண்டார்' என்று அடிமாற்றி எழுதுவதும், இராசாசியைக் கண்ணனாகவும் காமராசரை அவர் காலடியில் அமர்ந்து வணங்கி வாழ்த்துப்பெறும் அர்ச்சுனனாகவும் கருத்துப் படங்கள் வரைந்து போட்டு மகிழ்வதும் அவர்களுக்கே உரிய சாணக்கியத் தந்திர முறைகளாகும். இவற்றிலெல்லாம் இக்கால் விழிப்படைந்துவரும் தமிழ் மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று அவர்கள் அறிந்திருந்தாலும், தொடர்ந்து விடாமல் பரப்பப்படும் பொய்யும் வலிவுபெற்றேதீரும் என்றுஅவர்கள்நம்பிக்கைகொண்டிருப்பதில் வியப்பில்லை. அத்துடன் அவர்களின் தனிவுயர்ந்த தந்திரம் முள்ளைக் கொண்டே முள்ளைக் களைய வேண்டும் என்பதே. தங்கள் இனத்திற்குக் கேடு எந்த மூலையிலிருந்து வருகின்றதோ அதற்கு எதிர் மூலையில் உள்ளவர் எவரானாலும் அவரை உறவாக்கிக் கொள்வது என்பதும், அந்த எதிராளியும் தங்கள் எதிராளியின் உறவினனாக இருக்கவேண்டும் என்பதுமே அத் தந்திரத்தின் தலையாய உத்தியாகும். ஆரிய வரலாற்றை அடியூன்றிப் படித்தவர்களுக்குத் தவிர, இக்கூற்று ஏதோ இட்டுக்கட்டிய பழியுரை போலவே பிறர்க்குத் தோன்றலாம். ஆனால், ஆரியப் பார்ப்பனர்கள் எந்த நிலையிலும் இவ்வுத்தியைக் கடைப்பிடிக்கத் தவறியதே இல்லை. அரசியல், சீர்திருத்தம் பிற பொதுமைநலம் என்பவெல்லாம் அவர்களைப் பொறுத்தமட்டில் வெறும் வாயுரைக் கோட்பாடுகளே. அவற்றில் ஈடுபட்டு, அவற்றிற்காகவே தங்களை அழித்துக்கொண்ட பார்ப்பனர்களை எந்த வரலாற்றுப் பொத்தகத்திலும் காட்ட முடியாது. ஏதோ, ஓரிரண்டு பார்ப்பனர்கள் அவ்வாறு அழிந்து போனதாகக் காட்டப்பட்டாலும், அவர்கள் எல்லாரும் மேலே கூறப்பட்ட தந்திர உத்திகளை நிறைவேற்றுவதில் தாங்கள் எதிர்பாராத வகையில் தோல்வியுற்றுப் போனவர்களாக இருப்பார்

www.thamizham.net - Free E book No 7424

களே தவிர, அரசியலுக்காகவே உயிரை ஈகஞ்செய்தவர்கள் என்று சொல்வதற்குத் தக்க அடிப்படை கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

இந்த வரலாற்றுப் பின்னணியோடு பார்த்தால் இராசாசியின் திசை திருப்பம் ஒன்றும் வியக்கத்தக்கதும் இல்லை; பெருமைபடத் தக்கதும் இல்லை. அவர் செய்தது வெறும் கருவி மாற்றமேயாகும். ஆனால் கருவி மாற்றத்திலும் நாம் கருத்தைச் செலுத்தித்தான் ஆக வேண்டும். சதரங்க ஆட்டத்தில் தொடவே கூடாத ஒரு காயை எதிரி நகர்த்துகின்றான் என்றால், ஏதோ ஒரு வழியில் நம்மை அவன் ஏமாற்ற முற்பட்டிருக்கின்றான் என்றே எண்ண வேண்டும். அதுபோல், எந்தக் காமராசரைப்பற்றி, 'படிக்காதவர்க்கு அரசியல்தெரியாது', 'அவர் அரசியலிலிருந்தே விரட்டப்பட வேண்டியவர்' என்று பலவாறு இழித்தும் பழித்தும் பேசி வந்தாரோ, அந்தக் காமராசரையே இப்பொழுது தம் பகடைக் காயாகநம்பி, இராசாசி பேசுகின்றார் என்றால், ஆழ்ந்து எண்ண வேண்டியவர் இராசாசி அல்லர்; திரு. காமராசே ஆவர்; அல்லது அவரை நம்பிப் பின்பற்றிப் போகும் ஆயிரக்கணக்கான பேராயக் கட்சிக்காரர்களே யாவர்.

இனி, காமராசர் இராசாசியின் அரசியல் மாற்றத்திற்குத் தம் திறமையான தலைமையின்மேல் வைத்த நம்பிக்கைதான் காரணம் எனப் பொருள் கொள்வாரானால், அவர் ஏமாளித்தனத்திற்கு நாம் இரங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அவர் அப்படி ஏமாறித்தான் தீருவது என்றே முடிவெடுப்பாரென்றால், அவரின் அரசியல் வீழ்ச்சியின் இறுதிக்கட்டமே இப்பொழுது நடந்து கொண்டிருப்பதாக அவர் எண்ணிக் கொள்ளலாம். இதனை உணர்ந்து கொண்டுதானோ என்னவோ, இராசாசி தம் கையை நீட்டும்பொழுது காமராசர் தம் கையைச் சுருக்கிக் கொண்டார். ஆனால், எந்த நிலை எப்படியானாலும் நாம் இப்பொழுது சொல்ல வந்தது, தமிழர்கள் (யார் எந்தக்கட்சியின் அணியில் இருந்தாலும்) அனைவரும் எப்பொழுதும் இல்லாதபடி இனிமேல் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே! ஆரியம் மீண்டும் தலைதூக்கி யிருக்கின்றது. ஓரினத்தின் இழிந்த கோட்பாடுகள் அழிந்தொழியப் போகின்ற நேரத்தில் அதற்கோர் எழுச்சி ஏற்படத்தான் செய்யும். வேதக்கால ஆரியம் என்றோ அழிந்துவிட்டது. அவ்வாறு அது முற்றும் அழிந்தொழிந்து போகுமுன், அதன் எஞ்சிய பகுதி தமிழினத்தின் அறவுணர்வுகளை ஒருவாறு கைப்பற்றிக் கொண்டது. அவ்வாறு தமிழினத்தோடு தமிழினமாக அஃது ஒன்றிப் போயிருக்கவில்லையென்றால், என்றோ அது வரலாற்றிலிருந்தே மறைந்து போய்க் காலவெள்ளத்துள் கரைந்து போயிருக்கும். அவ்வாறுதான் நடு

www.thamizham.net - Free E book No 7424

ஆசியா, ஐரோப்பா முதலிய நாடுகளில் பரவியிருந்த ஆரியக் கோட்பாடுகள் முற்றும் மறையுண்டு போயின. இன்றுள்ள உருசிய, ஐரோப்பிய மக்களுடைய முன்னோர் ஆரியரே என்றால், நாம் வியப்படைவதற்குக் காரணம், அவர்கள் ஆரியர் என்று கண்டுகொள்ள முடியாதபடி அவர்கள் அடைந்துள்ள இனத்தினதும், கொள்கையினதும் தலைகீழ் மாற்றங்களே! புறவுலகத்துப் பரவியிருந்த ஆரிய இனம் அடியோடு தம் காட்டு விலங்காண்டிக் காலத்து இழிந்த வேத முறைகளை அடியோடு கைவிட்டுவிட்டுப் பிற மக்களோடு மக்களாய் மேம்பாடுற்றிருக்கையில், இங்கிருக்கும் இனம்மட்டும் தம் இழிந்த கொள்கைகளை இன்னமும் கைவிடாது, அவற்றைக்கொண்டே பிற இனமக்களை இழிவுபடுத்தியும் அடிமைப் படுத்தியும் வாழ்ந்து கொண்டிருப்பதுடன், அவற்றில் இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது. தமிழகத்தில் ஆரியம் தன் நச்சுப் பற்களைப் பிடுங்கிக் கொள்ளவில்லையானால், அப்பற்கள் என்றோ ஒருநாள் தட்டப்பட்டே தீரும் என்பது மட்டும் உறுதி. அப்பற்களால் அவர்களுக்கும் கேடு; அவர்கள் சூழ்ந்திருக்கும் மக்களுக்கும் கேடு. இவ்வுண்மை இவ்விடத்தில் கூறப்படுவதன் நோக்கம், ஆரிய திரவிடப் போராட்டம், ஆரிய–திரவிட உணர்ச்சிகள் உள்ளவரை நடந்துதான் தீரும் என்பதையும், அவ்வுணர்ச்சிகள் அழிய வேண்டுமானால், ஆரியப்பார்ப்பனர்கள் தங்கள் தந்நலச்சூழ்ச்சிகளையும், அரசியல் தந்திரங்களையும் அறவே கைவிட்டுவிட்டுப் பொதுநல நாட்டங்கொண்டு எதிலும் ஈடுபடவேண்டும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்திக் காட்டவே யாகும். அவ்வாறன்றி அவர்கள் தங்கள் நலத்துக்காக மக்களையும் அரசியலையும் குழப்பவும், அந்தக் குழம்பிய குட்டையில் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேடிக் கொள்ளவும் முற்படுவார்களானால், அந்நிலையே நெடுநாட்களாக நடந்துவரும் கருத்துப் போராட்டம், கருவிப்போராட்டமாக உருவாக வழிவகுத்துவிடும் என்பதையும் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

பொதுவாகவே ஆரியப்பார்ப்பனர்கள் தங்கட்கு இயல்பாகவுள்ள நெளிந்து கொடுத்துவரும் தன்மைகளால் பலவகையான ஏற்றங்களைப் பெற்றிருப்பதை மறுக்க முடியாது. அவர்கள் உடம்பு கொழுகொழுப்பானது; உள்ளமோ முறமுறப்பானது. அவர்களின் பேச்சு எளிதே எல்லார் காதுகளிலும் நுழையும்; அதனால் விளையும் நன்மையோ அவர்கள் வயிற்றில் மட்டுந்தான் நுழையும். அதனால் அவர்கள் பெறுகின்ற வாய்ப்புகள் ஏராளம்; அடைகின்ற ஊதியங்கள் மிகுதி. நூற்றுக்கணக்கான செய்தித்தாள்கள், கிழமை, மாதவெளியீடுகள் முதலியன, அவர்கள் அதிகாரங்களில் இயங்குகின்றன. வானொலி அமைப்போ அவர்களுக்காகவே ஏற்பட்டது. அப்பளம்

www.thamizham.net - Free E book No 7424

பேர்ட்டு விற்கும் அம்மாமியாக இருந்தாலும் சரி, உயர்நெறி மன்ற வழக்கறிஞராக விருந்தாலும் சரி வானொலி நிலையத்தில் இருவர் குரல் களுக்கும் வழியுண்டு. இத்தகைய விளம்பர வாய்ப்புகளால் அவர்கள் அரசியலில், குமுகாயவியலில், ஏற்படுத்திவரும் விளைவுகள் மிகமிகப் பெரியன; அரியன! மூன்றடி உள்ள 'வாமனனை' மூவாயிரம் அடி வளர்ந்த 'அநுமனாகவும்' கதையளப்பார்கள்; மூவாயிரம் அடி உள்ள 'இராவணனை' மூன்றடி உள்ள 'இரணியகசிபு'வாகவும் உருமாற்று வார்கள். மாம்பலத்தில் உள்ள ஒரு பையனின் உச்சிக்குடுமியில் ஏழெட்டுப் பொன்மயிர்கள் வளர்ந்து வருகின்றன என்பார்கள். காஞ்சி காமகோடியாரின் கால்பட்ட இடத்திலெல்லாம் தண்ணீராய்ப் பீச்சி யடிக்கின்றது என்பார்கள். எதை எதை, எப்படி எப்படியாய் உருமாற் றிக்காட்ட வேண்டுமென்று அவர்கள், அல்லது அவர்கள் மூலாசிரியர் அஃதாவது—இராசாசி விரும்புகிறார்களோ, அதை அதை, அப்படி அப் படியெல்லாம் உருமாற்றிக் காட்டும் வல்லமை அந்தச் செய்தித்தாள்க ளிடமும் வானொலி நிலையங்களிடமும் உண்டு. அவற்றை வைத்துக் கொண்டு அரசியலிலாகட்டும், குமுகவியலிலாகட்டும் அவர்கள் விரும்புகின்றவர்களைக் கோபுரத்திற்கும் ஏற்ற முடியும்; குப்பை மேட்டி லும் தள்ள முடியும். இவற்றை யெல்லாம் திருவிளையாடல்கள் என்று விளம்பரப் படுத்துவார்கள்; கீதையிலே சொல்லப்பட்டிருக்கின்றன என்று மக்களை மயங்க வைப்பார்கள். இழிவு, பொய், பழி இவற்றைப் பற்றி அவர்கள் என்றும் கவலைப்பட்டதே இல்லை. அவர்கள் நடத்தும் தந்திரப் போர்களில் வெல்வதும் தோற்பதும் அவர்கள் இல்லை; அவர் களுடைய எதிரிகளே! அவர்களுடைய வேலையெல்லாம் இரண்டு ஆடு களுக்கிடையிலும், அல்லது யானைகளுக்கிடையிலும் சண்டை மூளச் செய்வதே! ஆனால் வெற்றிபெறுகின்ற எந்த இனத்தோடும் இவர்கள் தொடர்ந்து இருந்ததாக வரலாறே இல்லை சண்டையினால் இரண்டு கட்சிக்கும் ஏற்படுகின்ற இழப்பெல்லாம் இவர்களுக்கு ஊதியந்தான். அதனால் இவர்கள் என்றைக்கும் எதையும் இழந்து ஏமாறியது மில்லை. பறிகொடுத்துப் பதறியதும் இல்லை. இவர்களின் மடியும் வயிறும் என் றைக்கும் நிறைந்தேதான் இருக்கும்.

67-இல் தி. மு. க.வை வெல்ல வைத்ததும் இவர்கள்தாம்; காம ராசரைத் தோற்கடித்ததும் இவர்கள்தாம்; அஃதாவது இவர்கள் ஏற் பாடுதான். காமராசருக்கு முட்டுக்கொடுத்த பெரியாரைத் தி. மு. க. விற்கு முட்டுக்கொடுக்கும்படி மாற்றியதும் இவர்கள்தாம். நாட்டில் எல்லாரும் ஓய்ந்து அமைதியாக இருப்பது இராசாசிக்குப் பிடிக்காது ஏனென்றால், பாரதப்போர் இல்லையானால் கண்ணனுக்கு வேலை என்ன? அமைதியுறுகின்ற மாநிலத்தில் இராசாசியின் பெயர் தாள்களில் அடி

www.thamizham.net - Free E book No 7424

பட வழியிருக்காது. இரண்டு கட்சிகள்—அதுவும் ஓரினத்தின் இரண்டு கட்சிகள்—ஒன்றையொன்று எதிர்த்துக்கொள்கையில்தான், இராசாசியின் தந்திரத் திரி சுடர்விட்டு விளங்கும். அவர் மூளையும் கொழுந்துவிட்டு எரியும். 67-க்குப்பின் அமைந்து கிடந்த அவர் கருத்துகள் 72 நெருங்க நெருங்க 'படார்' 'படார்' என்று வெடிப்பதற்கும் இதுதான் காரணம். 67-இல் தாம் தாங்கிய தி. மு. க. தம்மையும் தம் இனத்தையும் தாங்கும் என்று இராசாசி நினைத்தார். ஆனால் தி. மு. க. வின் ஆணிவேர் பெரியாரின் நெஞ்சுக்குள் காலூன்றியிருக்கின்றது என்பதை 70-க்குள் இராசாசி அறிந்து கொண்டார். முள்ளை முள்ளால் தான் எடுக்கவேண்டும் என்ற குல்லுகபட்டரின் அதே பாட்டைத்தான் தி. மு. க. கற்றுக்கொண்டு செயலாற்றுகின்றது என்பதை அறிந்த இராசாசி, உடனே காமராசரைத் துணையாக்கிக்கொள்ள காலம் பார்த்திருந்தார். காமராசரின் 'இந்தியாவைக் காப்போம்' என்ற குரல்கேட்டதும், இதுதான் தக்க நேரம் என்று 'வாழ்க காமராசு' என்று கூப்பாடு போட்டார். 67-இலும் காமராசர் எத்தனையோ முறை இதே குரலை எழுப்பியிருக்கின்றார். அப்பொழுதெல்லாம் இராசாசிக்கு 'இந்தியாவைக் காப்போம்' என்பது 'தி. மு. க. வைக் காப்போம்' என்றே பொருள் பட்டிருக்க வேண்டும். தாம் என்னவோ கொள்கையைக் கண்டு பிடித்துவிட்ட பெருமிதத்தில் உலாவிய காமராசருக்கு, இராசாசியின் வாழ்த்துரை மயக்கத்தைக் கொடுத்தது. தாம் கூறிய சொல வகத்தில் ஏதோ மந்திரவாற்றல் இருப்பது போலவும் இராசாசி அதில் மயங்கி விட்டதாகவும் காமராசர் எண்ணிப் பெருமிதப்பட்டுக் கொண்டார். ஆனால் இராசாசி எதற்கும் மயங்காதவர் என்று காமராசருக்கும் தெரியும்; காமராசும் எதற்கும் மசியாதவர் என்று இராசாசிக்கும் தெரியும். என்றாலும் பட்டும்படாததுமாக இவர்கள் பார்த்துக்கொண்ட கள்ளப் பார்வையைப் பொருள்நிறைந்த பார்வையாக மாற்றிவிட ஆரியப் பார்ப்பனர்கள் வரிந்து கட்டிக்கொண்டு தெருவுக்கு வந்து விட்டனர். விளைவு......?

இராசாசி, காமராசரை இணைத்து வைத்துப் படங்கள், கட்டுரைகள், வினாவிடைகள், இலைமறை காய்போலும் வானொலிப் பேச்சுகள் முதலியன மளமளவென வெளிவரத் தொடங்கிவிட்டன. **சிவகாமி பெற்ற ஏழை, சிவகாமியின் செல்வனானன்!** படிக்காத பேதை, படிக்காத மேதை யானார். முன்பு இனித்த தி. மு. க. இன்று கசந்துபோனது; முன்பு கசந்த காமராசர் இன்று பச்சரிசி மாங்காய்போல் இனித்துக் கிடக்கின்றார். 'கலியுக'க் கண்ணனின் திருவிளையாடலை என்னென்பது! பார்ப்பான் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தாலும் சரி, பாராளுமன்ற உறுப்பினனாக இருந்தாலும் சரி, 'ஆரிய பவன்' முதலாளியாக இருந்தாலும் சரி, ஆளுநராக உயர்ந்தாலும் சரி, அவன் சாணக்கியத்

www.thamizham.net - Free E book No 7424

தன்மை மட்டும் என்றும் அவனை விட்டுப் போகவே போகாது என்பது எத்துணை உண்மை! இந்த நிலையில் அவர்கள் கண்ணைமூடிக்கொண்டு காமராசுக்குத் தரும் பெருமைதான் என்னே? தி. மு. க. வைத் திட்டித் தீர்க்கும் இழிவுதான் என்னே?

தி. மு. க. புதிதாக ஆட்சிக்கு வந்த பெருமையில் சிற்சில செய்தி களில் தலைகால் புரியாமல் நடந்து கொண்டாலும், பற்பல செயல்க ளில் பாராட்டும்படியாகவே நடந்துகொண்டு வருகிறது. மக்கள் விரும் பினும் விரும்பாவிட்டாலும் திருக்குறளுக்கு ஒரு பெருமை தரும்படி செய்திருக்கின்றது. ஆரியத்திருமண முறையை அடியோடு மாற்றி அமைத்துச் சட்ட வலிவேற்படுத்திக் கொடுத்துள்ளது. பார்ப்பனீயமே கொடிகட்டிப் பறந்த ஆட்சி யதிகாரங்களைக் கைப்பற்றித்தமிழர்களுக்கு இதுவரை ஏற்பட்டிராத அரசியல் வலிவை உண்டாக்கித் தந்திருக்கின் றது. பார்ப்பனப் 'புரோகித' முறையைஒழித்துக்கட்டி, கோயில்களின் போலி 'புனித'த் தன்மையை வேரோடு கல்லியிருக்கின்றது. வடநாட் டானின் அதிகார முதுகெலும்பு—கூனிப்போகும்படி சாட்டையடி கொடுத்து வந்துள்ளது. இந்தியின் கொடுமை நடையைத் தடுத்து, அதன் வல்லாண்மைக் கால்களை வெட்டியிருக்கின்றது. ஆரியவழிப் பாடப்பெற்று வந்த அடிமை வணக்கப் பாடலைத் தூக்கி வீசிவிட்டுச் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வணக்கப் பாடலைப் பாடுமாறு கட்டளை யிட் டுள்ளது. தமிழ்நாடு என்று கூறவும் கூசிக்கிடந்த வடவரையும் பிறரை யும் தன் அதிகாரத்தால் வணங்க வைத்திருக்கின்றது. மக்களை ஏமாற் றியே வாழ்ந்துவந்த மடத்தலைவர்களை மக்கள் மன்றத்திலேற்றிப் பொதுத்தொண்டுபுரியும்படி புரட்சிசெய்திருக்கின்றது. தமிழ்மொழியை ஏளனமாய்பேசித் தருக்கிவந்த கல்வியாளர்களின் வாய்களைக் கொண்டே தமிழ் முழக்கம் கேட்கும்படி செய்திருக்கின்றது. அரசினர் அலுவலகங்களில் குடிபுகுந்த ஆரியக் கோட்பாடுகளின் கடவுளர் படங் களை அப்புறப்படுத்தி யிருக்கின்றது. இன்னும் பேராயக் கட்சியினர் தொடுதற்கும் அஞ்சிய சில புதுமைத் திருத்தங்களைத் துணிந்து செயல் படுத்தி யிருக்கின்றது. பொருளியல் முன்னேற்றத்திற் குதவாமல் மண் ணில் புதையுண்டு கிடந்த சேலத்து இரும்பை, இந்திராவின் கைகளா லேயே தோண்டித் தரும்படி ஏற்பாடு செய்திருக்கின்றது. கல்வித்துறை யில் பிறர் எவரும் இதுவரை எண்ணியும் பாராத ஏற்றத்தைத் தமிழ கம் அடையும்படி செய்திருக்கின்றது. இறுதியாகத் தமிழ்நாடு விடுதலை பெறுதற்குச் சமமான மாநிலத் தன்னாட்சி முறையைப் பறைசாற்றி யிருக்கின்றது. பலநிலைகளில், அஃது இருக்கும் இருப்பிற்கும், அஃது ஏற் றுக்கொண்ட பொறுப்பிற்கும் தக்க முறையில் சிலவற்றைத் துணிந்து

www.thamizham.net - Free E book No 7424

செய்ய முடியாமற் போயினும், அதன் கொள்கைகளைப்பொறுத்தவரையில் அது தன்னை இழக்காமல் படிப்படியாக முன்னேற்றப் பாதையிலேயே கொண்டு செலுத்தியிருக்கின்றது. மொத்தத்தில் பக்தவத்சலம் ஆரிய அடிமையாக இருந்து, ஆண்டு கெடுத்தநாட்டை-உழுது கலக்கிய கழனியை நன்கு விளைவேற்றி யிருக்கின்றது. பொதுவாகத் தமிழ்மொழியைப் பொறுத்தமட்டிலும், தமிழ்க் குமுகாயத்தைப் பொறுத்தமட்டிலும் தி. மு. கழகமும் கலைஞர் மு. கருணாநிதியும் செய்யவேண்டிய செயல்கள், எத்தனையோ நிலுவையிருந்தாலும், செய்துள்ள வற்றிலும் செப்பமற்ற செயல்கள் சில விருந்தாலும், ஆட்சியைப் பொறுத்தமட்டில் பேராயக்கட்சி செய்த விளைவுகளைவிட தி. மு. க. விளைவித்தவை மிகுதியே! இன்னும் செய்யும் என்றும் எதிர்பார்க்கலாம். அஃது இதற்குள் பார்ப்பனப் பகையைத் தேடிக்கொண்டதே, அதன் செயல்முறை தமிழர்களுக்கு நன்மையைத் தருவதாகவே இருந்திருக்கின்றது என்பதற்குப் போதிய சான்றாகும். பார்ப்பனர்களுக்கு மாறானதும் தமிழர்களுக்கு நன்மையானதும் ஆனசில செயல்களை அது செய்யத்தொடங்கிவிட்டநிலையைக்கண்டுதான் பார்ப்பனர்கள் அதன்மேல் மிக்க கசப்படைந்திருக்கின்றனர். அதனை எப்படியாவது ஆட்சியினின்று இறக்கிவிட முடிவு செய்து கொண்டுவிட்டனர். அதன் எதிரொலிதான் தினமணிக்கதிரின் சிவகாமியின் செல்வனும் துக்ளக்கின் தூற்றல்களும்.

இனி, கலைஞர் கருணாநிதி ஆட்சி மட்டுமின்றி நடுவணரசும், பார்ப்பனர்களுக்குத் துணையாக இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுதான் இராசாசி இரண்டையும் ஒழித்துக்கட்டும் வன்மை வாய்ந்த ஒரு கட்சியையோ ஒரு தலைவரையோ கண்டுபிடிக்க வேண்டியவரானார். அனைத்திந்தியக்கட்சியாகத் தாம் ஒரு கட்சியைவைத்துக்கொண்டும், அனைத்திந்தியத் தலைவராகத் தாம் இருந்து கொண்டும் இராசாசியவர்கள் வல்லமை வாய்ந்த பிறிதொரு கட்சியையும், பிறிதொரு தலைவரையும் தேடிப்பிடிப்பது எதைக் காட்டுகின்றது என்றால், பார்ப்பனர்கள் தனிநிலையில் நின்று எதனையும் இவ்விந்திய நாட்டில் நிறைவேற்றிக் கொள்ளுதல் முடியாது என்பதையே. இறுதியில் இராசாசியின் கண்களில் பட்டவை, தென்னாட்டிலேயே இக்கால் வலிமை மிகுந்த காமராசர் தலைமையும், வடநாட்டிலேயே வலிமை மிகுந்த சனசங்கமும்தாம். இவ்விரு துணைகளையும் வைத்துக்கொண்டு இருபுறமும் வெற்றியெய்துவதே அவர் குறிக்கோள். பார்ப்பனத்தலைவர்கள் எப்பொழுதும் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு கட்சியைச் சார்ந்தே இருக்கவேண்டியே உள்ளனர். அவர்கள் நடைமுறையில் அவ்வாறு தனித்தனியாக நின்று இயங்கினாலும் செயல் முறையில்

www.thamizham.net - Free E book No 7424

எல்லாரும் ஒருவரே என்பதை மக்கள் இப்பொழுது உணர்ந்து வரு கின்றனர். பார்ப்பனர்கள் தனித்து நிற்பது இனிச் செல்லுபடி யாகாது என்றும் உண்மையைப் பச்சையாகப் புரிந்து தொண்டுதான் இந்திராகாந்தி பொதுவுடைமைக் கொள்கையினரோடு மறைமுகத் தொடர்பேற்படுத்திக்கொண்டு இனக்கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து நழு வப் பார்ப்பதும், இந்த இனக்கட்டுப்பாட்டை மீறி நடக்கின்ற செய லைக் கண்டிக்கும் முகத்தால் இராசாசி அவரை எதிர்ப்பதும் இக்கால் நம் கண்முன் நடந்துவருகின்றன. மற்றப்படி அவர் காமராசர், நிச லிங்கப்பா முதலியோர்க்கு மாறாக நடக்கின்றார் என்பதால் அன்று. காமராசர் பேச்சுக்கும், நிசலிங்கப்பா பேச்சுக்கும் செவிசாய்த்தல் கூடாது என்று இந்திராவுக்குக் குறிப்புணர்த்தியவரே இராசாசி தான். ஆகவே இராசாசியவர்கள் காமராசர் சனசங்கம் என்ற இரண்டு கற்களிலும் மூன்று மாங்காய்களை அடிக்க முற்பட்டிருக் கின்றார். அவருக்குத் துணைபோக இந்தியாவில் உள்ள அனைத்துப் பார்ப்பனத் தாள்களும், வானொலிப் பார்ப்பனக் கூட்டமும் முனைந்து நின்று உதவுகின்றன. அவற்றின் ஒருமித்த கூட்டுச் செயல்கள் தமிழகத்தில் இக்கால் நடைபெற்று வரும் தி. மு. க. விற்கு ஓர் அசைவை உண்டாக்கினும் உண்டாக்கலாம். திரு. காமராசரும் இம் முக்கூட்டுத் தந்திரத்தை உணராமல் இருக்கலாம். ஆனால் இரா சாசியின் தந்திரம் பலிக்குமானால் தி. மு. க. விற்கும் தோல்விதான்; காமராசருக்கும் தோல்விதான். அரசியல் நிலையில் காமராசர் தமிழக ஆட்சியைக் கைப்பற்றி அவரளவில் வெற்றி என்று கருதினும் சனசங்கத்தைக் கொண்டு வடநாட்டுப்புறத்தில் காமராசரின் கை ஓங்காமல் செய்யலாம் என்பதும், தி. மு. க. வைக் கொண்டு அவ ரைத் தமிழக அரசியலிலும் ஆட்டிப் படைக்கலாம் என்பதும், அதன் வழித் தி. மு. க. வைப் பெரியாரின் இணைப்பினின்று பிரித்துவிடலாம் என்பதும், இனநலத்தைப் பேண மறந்த இந்திராகாந்திக்கு ஒரு பாடம் கற்பிக்கலாம் என்பதும் இராசாசி போட்ட திட்டங்கள். இவை தோல்வியுற்றாலும் பார்ப்பனர்களுக்குக் கவலையில்லை என்பது இரா சாசிக்குத் தெரியும். அவர்கள் இதற்கிடையில் ஏற்படும் அரசியல் சூடுகளிலேயே காய்ந்து கொள்ளக் காலங் காலமாகக் கற்றிருக்கின் றார்கள் என்று இராசாசி அறிவார்.

இந்நிலையில் திரு. காமராசருக்குச் சில கூறிக்கொள்ள விரும்பு கின்றோம். "சென்ற தேர்தலில் விழுந்த அடி உங்கள்மேல் அன்று

www.thamizham.net - Free E book No 7424

நீங்கள் நம்பியிருந்த பக்தவத்சல சுப்பிரமணியக் கூட்டங்களின் ஒரு மித்த கொள்கைகளின் மேலேயே அந்த அடி விழுந்தது. அவர்கள் பிறவியிலேயே ஆரிய அடிமைகள்; பார்ப்பனரை நத்திப் பிழைக்கவே கற்றவர்கள்; பழக்கப்பட்டவர்கள். அவர்களிடமிருந்தும், வடநாட்டுப் பிடிப்பினின்றும் நீங்கள் விலகுவதற்காகவே நீங்கள் அரசியலில் தனிப்படுத்தப் பட்டீர்கள் என்று கருதிக் கொள்ளுங்கள். இன்னொரு முறை இந்தியாவை ஒன்றிணைக்கும் வீண் முயற்சியில் ஈடுபட்டு அரசியலில் நிலையான வீழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டா. இந்தியாவின் அரசியல் அமைப்பே மாற்றப்பட வேண்டிய காலம் வந்து விட்டது. எனவே தமிழக அரசியலை வலுப்படுத்தவும், அதில் உங்களை நிலைப்படுத்திக் கொள்ளவும் தமிழகத் தலைவர்களுடன் சேர்ந்து ஒத்துழையுங்கள். உங்கள் ஆற்றலும், வினையாண்மையும் ஆயிர மாயிரம் ஆண்டுகளாக அரசியலடிப்படையிலும், பொருளியலடிப் படையிலும், குமுகாய அடிப்படையிலும் அடிமையுற்றுக் கிடக்கும் தமிழினத்தைத் தூக்கி நிறுத்தப் பயன்படட்டும். 'பச்சைத் தமிழர்' என்று பெரியார் கொடுத்த பெயரை நிலைநாட்டிக் கொள்ளுங்கள். தி. மு. க. வில் இணைந்து விடுங்கள்; அல்லது இணைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் தொடங்கியுள்ள தன்னாட்சிப் போராட்டத்திற்குத் துணை நில்லுங்கள். நீங்கள் நம்பிய இந்திராகாந்தி உங்களுக்கு ஏற்படுத்திய அதிர்ச்சிக்கு இந்த அதிர்ச்சிதான் சரியான எதிரடி. இந்த அடி வடநாட்டினர்க்கும், பார்ப்பன இனத்திற்கும் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக வீழாதிருந்த அடி! இந்த அதிர்ச்சியடி மாற்றம் தமிழினத்தையே தன்மான உணர்வுக்குக் கொண்டு சேர்க்கும் தன்மை வாய்ந்தது; தமிழினத்தையே உலக அரங்கில் பெருமைப் படுத்திக் காட்டும் சிறப்பு வாய்ந்தது. ஏறத்தாழ கடந்த மூவாயிரமாண்டுகளாக மதத்தாலும் குலத்தாலும் இழிவுபடுத்தப்பட்டுத் தாழ்ந்து கிடக்கும் உயர்வுசான்ற ஓர் இனத்தின் அடிமை வரலாறு இப்படித்தான் முற்றுப்பெற வேண்டும். இதைவிட வேறு வழியில்லை. பெரியாரும், நீங்களும், கலைஞர் கருணாநிதியும் சேர்ந்து விட்டால் தமிழினத்தை அசைப்பதற்கு எத்தனைப் பட்டாளம் வந்தாலும் இயலாது. நாம் பார்ப்பனரை அழிக்க வேண்டுவதில்லை; ஆனால் பார்ப்பனீயத்தை அழித்தே யாகல் வேண்டும். இணைப்பென்பதன் கூட்டுக்குள்ளேயே அடங்குவதற்குத் தகுதியற்றதும், பார்ப்பனர்களின் தனி நலத்திலேயே கண்ணோட்டம் செலுத்துவதுமான சுதந்திராவுடனும், சனசங்


www.thamizham.net - Free E book No 7424

கத்துடனும் நீங்கள் சேருவதைவிட, இப்படி இணைவது எள்ளத் துணையும் இழிவாகாது. தமிழகம் தன்னாட்சி பெறுவதோடு நடுவணரசையும் வலிவுள்ளதாக ஆக்கிக்கொள்வது மிகவும் எளிது. அரசியலறிவு இறந்த காலத்தை அடியொட்டி நடப்பது மட்டுமன்று; எதிர் காலத்தைச் சமைத்துக் கொள்வதற்கும் உரியது. இராசாசியின் திசை மாற்றத்தைவிட உங்கள் திசைமாற்றம் கேடில்லை. தன்னலமற்றுப் பொதுநலம் நாடும் உங்கள் உள்ளத்திற்கு இஃதோர் அறைகூவல்! இணைவீர்களா?

*தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்.*

*நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே*
*ஒட்டாரை ஒட்டிக் கொளல்.*

*பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
*தகைமைக்கண் தங்கிற் றுலகு.*




**மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்**
**திருக்குறள் தமிழ் மரபுரை**
விலை உரு. 15-00

*கிடைக்குமிடம்-* திரு. தே. மணி,
*ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,*
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

**பாவலர் பெருஞ்சித்திரனாரின்**
**அரிய தமிழ் நூல்கள்.**

| | | | உரு. | காசு. |
|---|---|---|---|---|
| 1. | பாவியக்கொத்து | விலை | 2 — | 50 |
| 2. | எண்சுவை எண்பது | ,, | 1 — | 50 |
| 3. | புரட்சிப்பாவலர் பாரதிதாசன் | ,, | 0 — | 50 |
| | பதிவஞ்சற் செலவு | | 1 — | 50 |

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.


www.thamizham.net - Free E book No 7424

# உ. த. க. மாவட்ட அமைப்பாளர்க்கு உடனடி விளங்கோள்.

தமிழ் உலக முழுதுந் தழுவிய ஒரு தனி முழுமுதற் செம்மொழி யாதலின், அதன் ஆரிய மாசுகளைந்து சீரிய நிலைமை காக்க மாபெருந் தமிழ் மலையாம் மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், நல்லிசைப் புலவரும் ஆன்றவிந்தடங்கிய சான்றோரும் பண்பட்ட தமிழ் மக்களுமே கடைப்பிடித்தற்குரிய விழுமிய கொள்கைத் தாம். ஆதலால், கொண்டதுவிடாத குறடும் பேதையும் போன்ற கட்சி வெறியரும் காக்கரும் போக்கரும் அதிற் சேரத்தக்கா ரல்லர்.

கொடுந் தமிழுங் கொச்சைத் தமிழுமாய்த் திரிந்து ஆரியமுங் கலந்து, தென்மொழித் தன்மை பெரிதும் மாறிய திரவிடம் வேறு; எண்ணிற்கெட்டாத் தொன்மையில் தன்னந்தனியாகத் தோன்றிய தூய்மையுங் கன்னித் தன்மையும் பேணித் தென்னவர் வளர்த்த தீந் தமிழ் வேறு. அதனால் தமிழுக்கும் திரவிடத்திற்கும் வேறுபாடறியாத ஒரு குழு அல்லது கூட்டம் தமிழைக் காக்கவோ, வளர்க்கவோ முடியாது. இதை நடைமுறையிற் கண்ட பின்னரே உ. த. க. தோற்றுவிக்கப்பெற்றது.

இலக்கணமும் மொழிநூலும் சிறப்பக் கற்றுய்ந்த அறிவுடையாரே, மறைமலையடிகளின் பெருமையை அறியவல்லார்.

> *"புலமிக் கவரைப் புலமை தெரிதல்*
> *புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க*
> *பூம்புன லூர பொதுமக்கட் காகாதே*
> *பாம்பறியும் பாம்பின கால்"* (பழமொழி: எ).

மறைமலையடிகளே தமிழ்; தமிழே மறைமலையடிகள் என்று புனையினும் பொருந்தும். ஆதலால், அவர் படிமையை நிறுவுவது தமிழை நிறுவுவது போன்றதே.

உலக மென்பது உயர்ந்தோர் மேற்றே. உலகத்தில் வாழும் மாந்த (**human**) வடிவுகளெல்லாம் உலகமெனப்படா. கொச்சை மாந்தரும் உலகமாயின், கொச்சைத் தமிழை விலக்க ஏது விராது.

குருடர்க்கு யானை துடைப்பக்கட்டை யளவிலும் தூணளவிலும் தோன்றியது போல, குன்றிய அறிவுடையார்க்குக் குன்றின் அளவினரும் குன்றிமணி யளவிலேயே தோன்றுவர்.


www.thamizham.net - Free E book No 7424

தமக்குத் தமிழ்ப் பற்றின்மையைத் தம் சொல்லாலும் செயலாலும் தெளிவாகக் காட்டிக்கொள்பவர், தமக்குந் தமிழ்ப்பற்றுண்டென்று கூறுவது, "ஊமையாக நடித்து இரப்பெடுத்து வாழ்ந்த ஒருவர், பிறர் தன்னை ஐயுற்றபோது, "நான் பிறப்பிலிருந்து ஊமை" என்று சொன்னதையே ஒக்கும்.

அகப்பகையும் புறப்பகையுங் கலந்த எந்த இயக்கமும் உருப்படாது. ஆதலால், தனித்தமிழ்ப் பற்றும் கட்சிச் சார்பின்மையும் ஒருங்கே யுள்ளவரையே உ. த. க. உறுப்பினராகச் சேர்க்க. அல்லாரைச் சேர்க்கற்க. ஏற்கெனவே சேர்த்திருப்பின் உடனே நீக்கி விடுக. களைகளை முளையிற் களையாவிடின் பயிர் விளைந்து பயன்தரா. ஒருசில பயிரேயாயினும், மேலும் மேலும் வித்து விளைந்து நாளடைவில் உலகப் பரவப் பல்கிவிடும். உலக முழுதும் பரவியுள்ள கிறித்தவம், முதற்கண் கிறித்துவின் பன்னிரு பின்செல்லியராற் பரப்பப்பட்டதே. இன்னும் ஐந்தாண்டிற்குள் உ. த. க. இயக்கம் வெற்றிபெறுவதும், தனித் தமிழ் அரியணையேறுவதும், தெரிதரு தேற்றமாம்.

சேர்ப்புப் படிவத்தில் தவறாகக் குறிக்கப்பட்டுள்ள கட்சிக் குறிப்பை அடித்துவிடுக.

"வாய்மையே வெல்லும்."



உ. த. க. தலைவர்.

# நம் புதிய முகவர்கள்.

**சென்னை நகர் முழுவதும்:**

**கோபாலர் பண்ணை,**

32-A. அன்ட்டர்சு சாலை (Hunters Road) சென்னை-7.

**சேலம் நகர் முழுவதும்:**

**திருமுருகன் பதிப்பகம்,**

152. அரிசிப்பாளையம் தலைச்சாலை, சேலம்-9.

www.thamizham.net - Free E book No 7424



# நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

பாட்டு: ௨௪.

முரசுகடிப் புண்ட அரசரு மல்லர்;
உரைசெல் லாட்சியின் அவரி னேங்கியர்.
கோன்முறை திறம்பிக் குடிநிலை திரிமுன்
ஆன்றுரை கொளுவும் அமைச்சும் அல்லர்;
நவைதீர் அவையின் நலங்கூர் நாவினர்.
நுரைப்பஞ்சின் நரைதாங்கி
அரியேற்றின் அணலடர்ந்து
நெறியாற்றின் நெஞ்சுபடரப்,
பாடியுஞ் சேரியும் பட்டினப் பாக்கமும்
ஊருங் குடியும் ஓதை நகரமும்,
வெய்யினும் மழையினும் விதிர்க்கும் பனியினும்
பொய்யினும் புரையினும் பூட்கை தளராது,
காலையும் மாலையும் கடும்பகல் யாமமும்,
வைகலும் நாடி மெய்கலந்து புனைவின்றிக்
கொல்வரியின் சொல்பாய்ச்சித்
தொல்குடிமை கட்டழித்த
ஆரியத்தை அடிதுமித்துப்
பட்டமும் பதவியும் பரவலும் நாடாது,
பழமை கடிந்து பாழ்மை புலங்காட்டி,
மருளும் இருளும் மறுமையும் போக்கி,
நிகழ்நலம் ஒன்றே நிறைத்தெனக் காட்டி
குலக்கோ டரிந்து சமயக்கா லறத்துணித்துக்
கலக்குறு கொள்கைக் கடவுண் மறுத்தே
யாரும் யாவும் யாண்டுந் துய்மெனப்
புதுமை பொழிவித்துப் பொதுமை தழைவிக்கும்
அரியா ராகலி னவரே
பெரியா ரென்னும் பெயரி யோரே!

www.thamizham.net - Free E book No 7424

பொழிப்பு:

குறுந்தடியால் அடிக்கப்பெற்ற முரசை உடைய அரசருள் ஒருவரும் அல்லர்; உரையைக் கட்டளையாகக் கொண்டு செலுத்தப்பெறும் ஆட்சி வன்மையுடைய அவ்வரசரினும் ஓங்கிய ஆற்றல் உடையவர்; அரசு முறை மாறுபடலால் குடிமக்களும் தம் நிலையினின்று கெடலுறுமுன், அவ்வரசர்க்கு அறிவான் அமைந்து அறவுரை கூறி, அதனை மேற்கொண்டொழுகச் செய்ய வல்ல அமைச்சரும் அல்லர்; குற்றமற்ற அவ்வமைச்சரவையைச்சார்ந்தாரினும் குடிகளின் நலத்தை மிகுதியும் எண்ணி உரைக்கின்ற நாவினை உடையவர். நீரின் நுரை போலும் மென்மையும், பஞ்சின் இழை போலும் வெண்மையும் கொண்ட நரையைத் தாங்கி, ஆண் அரிமாவின் பிடரியைப்போலும் முகத்துத் தாடியும் மீசையும் அடர்ந்து, மக்களை நெறிப்படுத்தும் வழி முறைகளையே நினைத்து நிற்கும் நெஞ்சின்மீது படர்ந்து தொங்குமாறு, பாடிகள், சேரிகள், பட்டிகள், பாக்கங்கள், ஊர்கள், குடிகள், ஆரவாரம் மிகுந்த நகரங்கள் தோறும், வெயிலிலும், மழையிலும், நடுக்கஞ் செய்கின்ற பனியிலும், பிறர் தூற்றும் பொய்யுரைகளுக்கும், குற்றஞ் சார்ந்த இழிவுரைகளுக்கு மிடையிலும் தாம் கொண்ட கொள்கைப்பாட்டின் உறுதிதளராமல், காலையென்றும், மாலையென்றும், வெப்பம் மிகுந்த நண்பகலென்றும், குளிர்மிகுந்த நள்ளிரவென்றும் பாராது, ஒவ்வொரு நாளும் தாமே நாடிப்போய், தம் கொள்கையை வலியுறுத்த உண்மையான செய்திகளையே துணைக் கொண்டு, சொற்புனைவும், கருத்துப்புனைவும் இல்லாது, கொல்லப் பாயும் வரிப்புலியின் வீறுசான்ற சொற்களைக் கேட்போரின் செவிவழி மனவயலில் பாய்ச்சியும், தமிழ்க்குடியின் வன்மையைக் குலைத்து அழித்த ஆரிய இனத்தின் கேடுகளை அடியோடு வெட்டிச் சாய்த்தும், பட்டப் பெயர்களையும், பதவிநலன்களையும், பாராட்டுகளையும் மனத்தால் விரும்பாமலும், மக்கள் தம் அறியாமையால் கைக்கொண்டொழுகும் பழக்கவழக்கங்களைக் கடிந்து விலக்கியும், அவர் தம்மை வளர்ச்சியின்றி வெறுமைப் படுத்தும் இழிநிலைகளைச் சுட்டிக்காட்டியும், மக்களின் மயக்கமுற்ற போக்கையும், அறியாமை இருளையும், பிறவி நம்பிக்கைகளையும் நீக்குமாறு அறிவுறுத்தியும், கண்கூடான வாழ்வு நலம் ஒன்றே யாவருக்கும் நிறைவானதெனச் சுட்டிக்கூறியும், மக்கள் நலமெய்த முட்டுக்கட்டைகளாக நிற்கும் குலப் பாகுபாடுகளை வெட்டி வீழ்த்தியும், சமயங்களின் அடிநிலை வேர்களை அறுத்தும்,

www.thamizham.net - Free E book No 7424

தெளிவற்றுக் குழப்பமான கொள்கை சார்ந்த போலிக்கடவுள் தன்மைகளை மறுத்துரைத்தும், எல்லா மக்களும், எல்லா நலன்களையும், எவ்விடத்தும் துய்த்தல் செய்யுங்கள் எனும் புதுமை உரைகளைப் பொழிவித்து, அதன்வழிப் பொதுமை யறத்தை மக்கள் மனத்தில் தழையச் செய்தும் வருகின்ற அரிய செயல்களுக்கு உரியவர் ஆகலின், அவர் பெரியார் என்னும் பெயர்க்கு உரியவர் ஆவர்.

**விரிப்பு:**

இப்பாடல் புறத்திணையைச் சார்ந்தது.

கோவை, ஈரோட்டைச் சேர்ந்த வேங்கட இராமசாமி என்னும் இயற்பெயர் கொண்டவர், தம் செயற்கரிய செயல்களால் பெரியார் எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பெறும் தன்மையை உறுதிப் படுத்தி, வாழ்த்திப் பாடியதாகும் இப்பாட்டு.

தொன்மையும் பெருமையும் வாய்ந்த தமிழ்ப் பேரினம், இடையில் வந்து கலந்த ஆரிய இனத்தால் தம் குடிமை இழந்து, தாழ்வுற்று, மருளும் இருளும் நிறைந்த பல மூடப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு மேலும் மேலும் தன்மானமிழந்து தாழ்ந்து போதலைக் கண்டு வருந்தி, அவர்களைத் திருத்தும் பொருட்டுத் தம் வாணாள் முழுமையும் ஓவாது உழைக்கும் ஈ. வே. இராமசாமி என்னும் இயற்பெயரியர், தம் செயற்கரிய செய்கையால், பெரியார் என மக்களால் அழைக்கப் பெறுதலைக்கண்டு வாழ்த்திப் பாடியது இது.

முரசு கடிப்பு உண்ட அரசரும் அல்லர்: இவர் குறுந்தடியால் அடிக்கப்பெறும் முரசை உடைய அரசருள் ஒருவரும் அல்லர்; கடிப்பு-குறுந்தடி.

முரசு கடிப்புண்ணுதல்—முரசு குறுந்தடியால் அடிக்கப் பெறுதல்.

**உரை செல் ஆட்சியின்:** தம் வாயுரை செல்லுபடியாகி ஆளுமை செய்யும் ஆட்சி. வெறும் வாயுரையே கட்டளையாகி ஆட்சி செய்தல் அரசர்க்கே இயல்வதொன்று ஆயினும், அரசரல்லாத இவருடைய சொல்லும் தமிழக மக்களிடைச் செல்லுபடியாதல் ஒரு நாட்டையாளும் அரசர்க்குரிய பெருமையை இவருக் களித்தது. ஆனால், கருவியும், காவலும், கடிமதிலும், நாடும் உடைய அரசரின் சொற்கள் செல்லுதல் வியப்பன்று; அவை இல்லாத இவரின் சொற்கள் அரசரின்

www.thamizham.net - Free E book No 7424

கட்டளைச் சொற்களாக மக்களால் ஏற்கப் பெறுகின்றன எனின் இவர் அரசரினும் ஓங்கிய அதிகாரம் உடையராதல் பற்றியே இவரை அவரின் ஓங்கியர் எனலாயிற்று.

கோன்முறை திறம்புதல்: அரசன் தனக்குற்ற நெறிமுறைகளி னின்று மாறுபடுதல்.

குடிநிலை திரிமுன்: அரசன் நெறிபிழைத்தலை யொட்டிக் குடிக ளும் நிலை திரிவார்களாகையின், அதற்குமுன் என்றபடி.

ஆன்றுரை: அறிதலால் அமைந்த உரை.

கொளுவும்: உணர உரைக்கும், செலச் சொல்லும்.

அரசன் நெறிதவறின் குடிகளும் தவறுவர் என முந்துணர்ந்து, அவன் அங்ஙன் தவறுவாறு உணர வுரைக்கும் அமைச்சரும் அல்லர், இவர்.

நவைதீர்: குற்றந் தீர்ந்த—அறியாமை நீங்கிய.

அவையின்: அறியாமை நீங்கிய அமைச்சரவையினும்.

நலங்கூர் நாவினர்: அரசினதும், குடியினதும் நலன்களையே மிகுத்து நாடும் நாவினை உடையவர்.

அமைச்சர்க்குற்ற கடமையாலும், ஊதியம் பெறும் கருத்தாலும், அரசன் நெறிபிழைத்தல் குடிபிழைத்தலுக்குக் கரணியமாகு மென் றுணர்ந்து, முன்கூட்டியே அவர்க்கு, அறிவுரைத்தல் இயல்பாம் என்க. ஆனால் இவரோ, தாம் குடிகளுள் ஒருவராகி, ஊதியமும் அதன் மேற் கடமையும், பெறவும் பேணவும் அல்லவராயிருந்தும், அவ்வாறு பிழைத்தொழுகும் பேதைமையை இடித்துரைக்கும் தன்மையினராய் இருத்தலின் அவ் வமைச்சரினும் குடிகளின் நலனோம்பும் நாவினர் எனலாயிற்று.

நுரைப்பஞ்சின் நரைதாங்கி: நுரைபோலும் மென்மையும், பஞ்சு போலும் வெண்மையும் சார்ந்த நரைமுடியைத் தாங்கி.

அரியேறு: அரிமாவின் ஏறு.

அணல்: தாடி. முகவாயின் தோன்றிய மீசையும் தாடியும்.

நெறியாற்றின் நெஞ்சுபடர்: நெறிமுறைகளை வழிப்படுத்தும் நினைவுசான்ற நெஞ்சின்மீது படர்ந்து புரளும்படி.

www.thamizham.net - Free E book No 7424

**பாடியும்......நகரமும்:** முல்லைநிலத் தூர்களாகிய பாடியும் சேரியும், நெய்தல் நிலத்தூர்களாகிய பட்டினமும் பாக்கமும், மருத நிலத்து ஊராகிய ஊரும், குறிஞ்சி நிலத்தூராகிய குடியும், ஆரவார மிக்க நகரமும்.

**வெய்யினும்.........பனியினும்:** வெயிலென்றும், மழையென்றும், நடுங்குகின்ற பனியென்றும் பாராது வினைமேற்கொண்டு,

**பொய்யினும் புரையினும்:** மனத்தை அலைவிக்கும் பொய்யுரைகளாலும், வினையைத் தளர்விக்கும் பழியுரைகளாலும்,

**பூட்கை தளராது:** தாம்கொண்ட உறுதிப்பாடான கொள்கையில் நிலை நெகிழ்வுறாது.

**காலையும் மாலையும் கடும்பகல் யாமமும்:** காலையிலும், மாலையிலும், இடைப்பட்ட நடுப்பகலிலும், நடு யாமத்திலும்,

**வைகலும் நாடி:** நாள்தொறும் மக்களை நாடிப்போய்.

**மெய்கலந்து:** தம் கருத்தை எண்பிக்கும் மெய்ம்மை சான்ற எடுத்துக்காட்டுகளை இடையிடைக் கலந்து.

**புனைவின்றி:** சொல் லாரவாரங்களாலும், கருத்து ஆரவாரங்களாலும் அழகுபடுத்தாது எளிய உரைகளால்.

**கொல்வரியின் சொல்பாய்ச்சி:** கொல்லப் பாயும் வரிப்புலியைப் போலும் வீறுசான்ற சொற்களைக், கேட்போர் உணரும்படி செலச் சொல்லி–சொல்லாகிய நீரை மனமாகிய விளைநிலத்து விரைந்து பாய்ச்சி.

**தொல்குடிமை கட்டழித்த:** தொன்மை மிக்க தமிழ்க் குடியினைக் கட்டுக் குலைத்த.

**ஆரியத்தை அடிதுமித்து:** தமிழினத்தொடு இடை வந்துகலந்த ஆரிய இனம் தாம் பிழைத்தல் வேண்டிப் புகுத்திய எத்து ஏமாற்றுகளின் அடிப்படையெல்லாம் கூறிக் கருத்தான் முறியுண்டுபோமாறு வலுவிழக்கச் செய்து.

**பட்டமும் பதவியும் பரவலும் நாடாது:** ஆரவாரம் மிகுந்த பட்டப் பெயர்களையும், அதிகாரத்தையும் செல்வத்தையும் மிகுக்கின்ற அரசப் பதவிகளையும், புகழுரைகளையும் நோக்கமாக நாடாது, தொண்டு ஒன்றே குறிக்கோளாய் நின்று.

www.thamizham.net - Free E book No 7424

பழமை கடிந்து: அறியாமையால் மக்கள் தாங்கொண்ட மூடப் பழக்கங்களைக் கடிந்து விளக்கி;

கைம்பெண்ணை மீண்டும் மறுமணஞ் செய்வித்தல் கூடாதென் பதும், பெண்ணைக் கல்வி புகட்டாது அடிமைப்படுத்தி வைத்தல் வேண்டுமென்பதும், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், குத்து விளக்கேற்றுதல், தீவலம் வருதல் போலும் சடங்குகளன்றித் திரு மணஞ் செய்வித்தலாகா தென்பதும், காருவா (அமாவாசை) வெள் ளுவா (பௌர்ணமி) நாட்களிலும், கோள்மறைப்புக் காலங்களிலும் சடங்குகள் செய்தல் வேண்டுமென்பதும் போன்ற பழமை நிரம்பிய மூடப்பழக்க வழக்கங்களைக் கடிந்து விலக்கியவர் இவரே என்க.

பாழ்மை புலங்காட்டி: மக்களை முன்னேற்ற விளைவற்றவர்க ளாக ஆக்குகின்ற இழிநிலைகளை அவர்தம் அறிவுக்குப் புலப்படுமாறு விளக்கிக்காட்டி.

மக்களை நான்கு பிரிவுகளாக ஆக்கும் ஆரிய 'வருண' முறைக ளையும், அவற்றுள் மேற் பிரிவினர்க்கு அடுத்துள்ள பிரிவினர் தாழ்ந் தவர் என்னும் ஏற்றத் தாழ்வுகளையும் அவர்களுள் ஒரு சாரரைத் தீண்டத்தகாதவர் என்றுரைத்த கொடுமையையும் அன்ன பிறவற் றையும் மக்களை இழிந்தோராக்கும் பாழ்மைகள் என்று எடுத் துரைத்து, அவற்றிற்குரிய அறிவுநிலைகளைச் சுட்டிக் காட்டி விழிப் புறச் செய்தவர் இவரே என்க.

மருளும் இருளும் மறுமையும் போக்கி: மக்கள், அறியாமை நிலைகளுள் வழிவழியாய்க் கொண்ட ஈடுபாட்டு மயக்கத்தையும், அறி வொளி காணாது அறியாமை இருளுள் தம்மைப் புதைத்துக் கொள் ளும் மனமிருண்ட தன்மைகளையும், மறுபிறப்பு முதலிய பிறவிக் கருத்துகளால் ஏற்பட்ட போலித்தன்மைகளையும் போக்கி;

ஆ முதலிய விலங்குகளையும், கலுழன் முதலிய பறவைகளையும், மூஞ்சுறு முதலிய சிற்றுயிர்களையும் வழிபடுகின்ற மயக்கத்தையும், ஏவல். வைத்தல், எடுத்தல் ஆகிய பில்லி, இடுமருந்து, மோடி முதலி யன செய்தலும், கழிப்பாலும் காற்றாலும் நோய் முதலியன நீங்கும் என்று நினைத்தலும் ஆகிய அறியாமை இருளையும், நோயும், நொடி யும், வறுமையும், வாழ்வும் முன்பிறவியிற் செய்த தீவினை நல்வினை யைப் பொறுத்தன என்றலும், இப்பிறவியில் இல்லாதார் துன்புறினும் மறுபிறவியில் நலமெய்துவர் என்றலும் ஆகிய பிறவி நம்பிக்கைகளை

www.thamizham.net - Free E book No 7424

யும் நீக்குமாறு மக்கட்கு அறிவுறுத்தி நீங்கச் செய்யப் பாடுபட்டவ ரும் இவரே என்க.

திகழ்நலம் ஒன்றே நிறைத்தெனக் கூறி: கண்கூடான வாழ்வு நலம் ஒன்றே மக்கள் யாவர்க்கும் அறிவுக்கும் பொந்திகை தருவ தென்க் கூறி; பொந்திகை–மனநிறைவு.

குலக்கோடறிந்து: குலப்பிரிவுகளின் கொடுமை மிக்க ஏற்றத் தாழ்வுகளைத் தம் கருத்தால் முறிவுறச் செய்து; குலமாகிய கிளைப் பிரிவுகளை அரிதல் செய்து;

சமயக்கால் அறத்துணித்து: போலியும் புன்மையும் நிறைந்த செயல்களின்மேற் கட்டப்பட்ட போலிச் சமயப் புனைவுகளை அறவே வெட்டி வீழ்த்தி.

ஒவ்வொரு சமயமும் பிறிதொவ்வொன்றுக்கும் மாறுபட்ட அமைப்புகளையே உடைமையின், அவை ஒவ்வொன்றும் மக்களை ஒரு மித்த வழியிலல்லாது வேறுபட்ட வழிகளிலேயே கொண்டு சேர்த்துப், புன்மையும் பூசலும் நிரப்பி வருகின்ற நிலைகளைத் தம் ஆற்றல் பொருந்திய அறிவுரைகளால் மக்கள் மனங்களினின்று வெட்டி வீழ்த் திய குமுகாயச் சீர்திருத்தக்காரர் இவர்–என்க.

கலக்குறு கொள்கைக் கடவுள் மறுத்தே: மனக் கலக்கத்தினின் றெழுந்த கொள்கையால் தோன்றிய கடவுள் தன்மைகளை மறுத்து மனத்தூய்மையால் எய்தப் பெறுவது இறைக் கொள்கை. அவ்வா றின்றி–மனத்தூய்மை பெறாது தீய நினைவுகளாலும் தந்நலப் பற்று களாலும் கலக்கமுற்றுக் கற்பனை நிறைந்த நிலையில் தோன்றியது கடவுட் கொள்கையாகலின் அதை மறுத்தார் என்றபடி. என்னை? 'உள்ளங்கடந்த பொருள்' என்பது கடவுளெனின், உள்ளங் கடந்த பொருள் உள்ளத்துக்குப் புலப்படுவதெங்ஙன்? இனி உள்ளம் கடந்த தெனின் உள்ளம் என்பது வேறு? உள்ளமும் கடவுளும் ஒரே பொரு ளெனின் உள்ளத்தைக் கடந்து நிற்பது கூடுமோ? பொருள் என்பது மாத்திரை (அளவு)களான் அறியப் பெறுவதொன்றாகலான் கடவுளை அறியப் பெறுவதில் வேறுபாடுகள் தோன்றுவது ஏன்? ஒருள்ளத்தே கடவாமல் நின்றும் பிறிதோருள்ளத்தே கடந்து நின்றும் இருத்தல் கூடுமோ? அவ்வாறன்று! உள்ளம் என்பது அறிவு; ஆகையான் அறி வான் அறிந்துரைக்கப் பெறுத ஒன்று என்றுரைக்கின்; அறிவுக்குப் புலப்படாததை அறிவறிந்த தெவ்வாறு? அறிவு காணாத ஒன்றை

www.thamizham.net - Free E book No 7424

அறியக்கண்டது எது? அஃது ஒருவர்பாலிருந்து ஒருவர்பால் இராத காரணியமென்னை? உளர்பால் உணர்வித்தும் இலர்பால் மறைப்பித்தும் செய்தது எது? அவ்வல்லமை எவர்க்குண்டு? கடவுட்கே உண்டெனின் அவர் தோன்றாதிருக்கச் செய்த காரணியம் என்ன? அதனை நீவிர் அறிந்தது யாங்ஙன்? யாம் அறியவேண்டாதென்று கடவுள் கருதிச் செய்த ஒன்றை நீவிர் எமக்குப் புலப்படுத்த முயற்சி செய்வது ஏன்? —என்பன போலும் வினாக்கள் எழுதலை உன்னுங்கால் கடவுள் என்னும் தன்மையை மக்கள் உணர்ந்த நிலை மனக்கலக்கமுற்ற நிலையே என முடிவு வரும்.

இனி, கடவுளின் மெய்க்கொள்கைதான் என்னையோ எனின், அது கலக்கமுறா மனத்தெழுந்த தெளிந்த இறைக்கூறுபாடே என்க. இறை எனும் கொள்கையோ மறைவெளிப்பாடு. (கடவுள்—உள்ளங் கடந்தது. இறை—யாவினும் இறுத்த தன்மை உடையது. இறுத்தல்—தங்குதல்) மறைந்தநிலை புலப்படுவது இறை—என்னை? அறியக் கண்டது அறியாமை; அறியாமை கண்டது அறிவு. அறிவின் பலநிலைப் படிகளின் மீமிசைக் கொள்கையே மெய்யறிவுக் கொள்கை. அதுவே இறைக்கொள்கை. இறைநிலையுள் அணுவும் அண்டமும் ஒன்றே. இறைநிலையுள் அறிவும் அறியாமையும் ஒன்றே. விருப்பும் வெறுப்பும் ஒன்றே! புனலும் அனலும் ஒன்றே; நிலனும் விசும்பும் ஒன்றே; புலம்பனும் உடலும் ஒன்றே; ஒன்றினுள் ஒன்று ஒடுங்கும்; வெளிப்படும்; ஒன்றைவிட் டொன்று இயங்கும்; அடங்கும்; ஆகிய அனைத்து வினைப்பாடுகளும்இறைக் கூறுபாடே! இவற்றுள் இஃது இறைமை; இஃது இறைமையன்று என வேறுபிரித்தல் மாந்த அறிவுக்கு எட்டாதது. இவற்றின் தனித்தனி விளக்கமே அறிவியலும், சமயமும், நம்புமதமும், நம்பா மதமும், பத்திமையும், பற்றின்மையும். இவற்றை விரிக்கில் மிகப்பெருகும். எனவே இறைமை என்னும் தன்மை எவராலும் மறுக்கப்படுவதொன்றன்று. எவராலும் மறுக்கப் படாததெதுவோ, எவராலும் ஒப்புக்கொள்ளப் படுவதெதுவோ அதுவே இறைத்தன்மை. அன்பு, தாய்மை, இன்பம் முதலிய விழைபாடுகளும், சினம் பேய்மை, துன்பம் முதலிய வெறுக்கைப்பாடுகளும் இறைத்தன்மைகளே. தீயின் சூடும், நீரின்குளிச்சியும், இடியின் கொடுமையும், மழையின் அருண்மையும் இறைத் தன்மைகளே! இவற்றுள் ஒளிவேண்டுவன சில; இருள் வேண்டுவன சில; தீ வேண்டுவது சிலநிலை; நீர் வேண்டுவது சிலநிலை. வேண்டப்பெறும்

www.thamizham.net - Free E book No 7424

உயிர்களுக்கு வெண்டப்பெறாத நிலைகள் உளவாகையால், அவை இறைமை யல்லாது போய்விடுமோ? அழுதரற்றும் துன்பம் தேவை யற்றதெனின், கண்ணீரால் கண்கள் கழுவித் தூய்மை செய்யப் பெறுதல் இல்லாது போகுமே; அழுகையால் புலர்ந்து மலரும் சில உடலணுக்கள் தோன்றாதொழியுமே; இடி மின்னல் இன்றாயின் உலகுக்குக் காந்தவெளி குறைந்து வெறுமையுறுமே; ஆகையின் ஒளியும் இருளும் இறையே. துன்பமும் இன்பமும் இறைத்தன்மைகளே. அவை கன்மத்தாலோ, மாயையினாலோ உண்டாக்கப்பெறும் என்பனவெல்லாம் இறைவியல் தெளிவற்ற கலக்கமுற்றார் கதைத்த உரைகளே. அக் கன்மமும் மாயையும் இறையினின்று வேறுபடுவன வென்னின், இறைமையின் தனித்தன்மைக்கே இழுக்கெனக் கொள்க. அக்கதைப் புனைகளினின்றெழுந்த கடவுட் கூறுபாடுகள் இறைமையைப் பழிக்கும் இழிவுரைகளே! கிளியைக் கோட்டானென்றும், மானை மந்தியென்றும் உரைத்த போலியுரைகளே!

எனவே பெரியார் மறுத்துரைக்கும் கடவுட் கொள்கை என்பது சமயக் குரவர்கள் என்னும் கற்பனைக் கலைஞர்கள் படைத்த கட்டுரைகளையே என்றும், உண்மையான இறைமையினை எவரும் மறுத்தற்கியலாதென்றும், அவ்வாறு மறுப்பாரின் உரை தீயைக் காற்றென்றும், காற்றைக் கனப்பென்றும் கூறுதல் போலும் குறட்டுரைகளே என்றும், அவ்வாறு கூறுவார் உலகில் ஒருவரும் இலர் என்றும், குழந்தைக்கும், குமரனுக்கும் தந்தைக்கும், தாய்க்கும் புலப்படும் அன்பு பல்வேறு நிலைகளை உடையதெனினும், அவற்றை இல்லையென்று மறுப்பார் எவருமிலாது போலவும், ஒருவருக்கு மிகச்சுடும் வெந்நீர், பிறிதொருவர்க்கு மிகக் குறைவாகச் சுட்டாலும் அதனைக் குளிர்நீர் என்று கூறுவார் எவருமிலாது போலவும், இறைமை பல்வேறு உயிர்களால் பலவகையில் அறிந்து கொள்ளப் பெற்றாலும், அத்தன்மையினை இல்லை என்று மறுப்பார் எவருமிலர் என்றும் தெளிந்து கொள்க.

இனி, "தீய நினைவுகளாலும், தந்நலப் பற்றுகளாலும். கலக்கமுற்றுக் கற்பனை நிறைந்த நிலையில் தோன்றியது கடவுட் கொள்கையாகலின் அதை மறுத்தார் என்றபடி" என்னும் முற்கூறிய அடியினுள் வரும், தீயநினைவுகள், தந்நலப்பற்று, கற்பனை-முதலிய சொற்கள் எவற்றைக் குறிப்பன என்பதற்கும், அவை இறைமை ஆகாவோ என்பதற்கும் விடையென்னெனின் கூறுதும்.

www.thamizham.net - Free E book No 7424

தீயநினைவும், தந்நலப்பற்றும், கற்பனையும் இறைமையே! ஒன்றுக்குத்தீது பிறிதொன்றுக்கு நன்றாயும், ஒன்றுக்குத் தன்னலம் பிறிதொன்றுக்குப் பிறநலமாயும், ஒன்றின் கற்பனை பிறதொன்றின் நிகழ்பாடாயும் இருத்தல் கண்கூடு. (மாந்தன் பறப்பதுபோலும் செய்யும் கற்பனை, பறவைக்கு நிகழ்பாடாயிருத்தல் காண்க.) உலகில் இயங்கும் பல்லாயிரங்கோடி உயிர்களுள் மாந்த உயிரினத்திற்கு என மாந்த இனம் வகுத்துக் கொண்டவையே அதற்கு நன்மையென்றும், தீமையென்றும் பெயர் பெறுவன. இவை ஓர் எல்லையுட்பட்டன. பெண்டிர் யாவரும் ஒருவர் போல்வரே என்னும் இயற்கூறுபாட்டில், மாந்தன் அவரைத் தாயென்றும், மனையென்றும், தங்கையென்றும் வகுத்துக்கொண்டது போல்வதே எல்லை என்க. அவ்வெல்லை கடந்தோமெனின் நம் நன்மை இன்னொன்றால் தீமை என்று பெயர்சூட்டப் பெறுவதையும், நம் தீமை இன்னொன்றால் நன்மை எனப் பெயர் சுட்டிச் சொல்லப் பெறுவதையும் நாம் உணரலாம். அக்கால் நாம் கொண்ட நமக்குகந்த தன்மைகள் மாறுபட்டுப் போவதைப் பார்க்கலாம். அந்நிலையில் அவை இறைமையில்லை என்று சொல்லப் பெறுமா?

மாந்த நிலையில் உணவு எரிக்கப்பட்டுச் செந்நீர் உறிஞ்சப் பெற்றால் எஞ்சிய கரி மலம் என்று சுட்டப்பெறும்; கழிவென்றும் இழிவென்றும் தள்ளப்பெறும் அது, பன்றிக்கு உணவுதானே. நமக்கு உணவு இறைமை-இறைவன் தந்ததென்றால் பன்றிக்கு மலம் இறைமையென்றும் இறைவன் தந்தது என்றும் கூறப்பெறுவதில் பிழையென்ன?

எனவே, சமயங்களைத் தோற்றுவித்த கற்பனைக் கலைஞர்கள் அனைவர் கருத்துகளும் அவர்கள் அவர்களுக்குள்ளாகவே மறுத்தொதுக்கும் கருத்துகளென்று உணர்க. மறுக்கப்படாத அறிவு, எதுவோ, மறுக்கப்படாத உணர்வுநிலை எதுவோ அதுவே இறை என்க. பிறநிலைகள் எல்லாம் இறைமையின் தன்மாத்திரைக் கூறுபாடுகளே.

இவ்வடிப்படையில் நோக்கின் சமயங்கள் கூறுகின்ற கடவுள் நிலைகள் கலக்குறு கொள்கையின் எழுச்சிகளே! அவை அனைத்தும் இறைமைக்குட்பட்ட கோட்பாடுகளே எனினும் அவைதாம் இறைமை எனச் சுட்டப்பெறுவதில் தவறில்லை. பிறவெல்லாம் வேறு என்பதில்

www.thamizham.net - Free E book No 7424

தாம் பிழைபாடுகள் நேர்ந்திருப்பதை அறிவியல் கண்கொண்டு பார்ப்போர் உணர்வர். அறிவியல் மெய்யறிவியலுக்கு மாறுபட்டதன்று. மெய்யறிவியலுக்கு அறிவியலே வாயில். மனம் திரையாயின் அறிவியல் ஒளியும், மெய்யறிவியல் காட்சியுமாம். பெரியாரால் கடியப்பெறும் கொள்கைகள் சாணியை வணங் கென்பதும், சாம்பலைப் பூசென்பதும் போன்ற சிறுமைக் கொள்கைகளே என்க. இறைமையின் பிறநிலைகள் பிறவிடத்து விளக்கப்பெறும்.

யாரும் யாவும் யாண்டும் துய்ம் என. உலக மக்கள் யாவரும் உலகில் நலந்தரும் யாவற்றையும், எக்காலும் துய்த்தல் செய்வீர் என.

பொதுமை அறம் பிலிற்றும் இக்கொள்கை உலக மக்கட்கெல்லாம் உடன்பாடான கொள்கை. ஒரு சாரார் மறுத்தொதுக்கும் எதுவும் பொதுமைக் கொள்கை யாகாது என்க.

புதுமை பொழிவித்துப் பொதுமை தழைவிக்கும். இத்தகைய மக்கட்குப் புதுமையான எண்ண வுணர்வுகளை அவர்கள் மனத்தே சொற்களால் பொழியச் செய்து, பொதுமை யறத்தைத் தழையச் செய்யும் அரியார் ஆகலின் அவர் ஒருவரே பெரியார் எனத்தக்கவர் என்க.

பெயரியோரே!: எளிய மாந்தர்களினின்று வேறுபட்டெழுந்த பெரியார் என்னும் பெயருக்கு உரியவரே! என்னை? செயற்கரிய செய்வார் ஆகையால், பெரியார் என்னும் பெயர் அவர் முதுமையான் வந்ததன்று. முதுமை எய்தியோர் பலர் உளர் எனினும், பிறர்க்கு அருமையானவற்றை இவர் செய்கின்ற தன்மையாலேயேஇவரைப்பெரியார் என்பது; இது பாடாண்திணையும் வாழ்த்தியலென் துறையுமாம்.

நினைவில் வையுங்கள்.

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடுகள்.

மாணிக்கன். தரங்கம்பாடி

பூஞ்சோலை. காரைக்கால்-1.

ஆண்டுக்கட்டணம் ஒவ்வொன்றுக்கும் 3 உருபா.
தனியிதழ் ஒவ்வொன்றும் 25 காசு.
இன்றே உறுப்பினராகுங்கள்.

www.thamizham.net - Free E book No 7424



# மக்களவை

*(இப்பகுதி அன்பர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவதற்காக அமைந்ததன்று. பொதுநோக்கில் நின்று மொழி, இனம், நாடு ஆகியவற்றின் நலனுக்காகத் தம்தம் கருத்துகளை வெளிப்படுத்தவோ, தருக்கமுறையில் பிறரின் கருத்துகளை மறுத்துரைக்கவோ இப்பகுதியை அன்பர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்நோக்கினின்று வழுவும் கருத்துடைய மடல்களை அன்பர்கள் இப்பகுதிக்கு விடுக்க வேண்டா என்று வேண்டிக் கொள்கின்றேன்.*

**—ஆசிரியர்.)**

## [ம-92] பெரியாரின் கண்டனக்குரல் எங்கே?

தமிழாயும் பாவல! உலகின் உயர்ந்த குடியின் உண்மைப் பெருமையை மறைத்து, இல்லாத ஒன்றை இருப்பதே போலப் பலவாறு பன்னிப்பன்னி தங் குலப்பெருமையை நிலைநாட்ட முயன்று, வெற்றியுங் கண்டுவரும் ஆரியர்கள், நம்மை இன்றளவும் அடிமைகளாகவே நோக்குகின்றனர். களப்பிரர் காலம் தொட்டு பல போராட்டங்கள் அவ்வப்போது தோன்றிய வண்ணமே இருந்துள்ளன. பார்ப்பனர்களாலும், அவர்களது அடிவருடிகளாலும் நம் தமிழ்மொழி, இனம், பண்பாடு அனைத்திலுமே இன்றளவும் இழிவுக்கறை பூசப்பட்டு வருகின்றது. அக் கறைநீக்கப் போராடும் பகுத்தறிவுத் தந்தை, தமிழர் இனங்காக்கப் போராடும் அரிமா, பெரியார் ஈ. வே. இரா. அவர்களது அயரா உழைப்பினாலும், உணர்ச்சித் தூண்டுதலினாலும், துணிவுப் போராட்டங்களினாலும் நம் நாட்டில்-குறிப்பாகத் தமிழ் நாட்டில், ஆரியத்திற்குக் கொடுக்கப்பட்ட அடியும், தமிழர்கள் விழிப்புணர்ச்சி பெற்று எண்ணவும், செயல்படவும் தொடங்கியதும், இன்று நாம் கண்டுவரும் பேருண்மைகள். இஃது ஆரியர்களை எதிர்கொண்ட இனப் போராட்டத் தலைவர்கள் இதுவரை காணாத பெரும் வெற்றி. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழர்-ஆரியர் உறவையும் இன்றைய நிலையையும் சற்றே உன்னிப் பார்ப்போருக்கு இது தெளிவுறும். எவரும் மறுக்கமுடியாத வரலாற்றுக் கூற்று.

எந்த மூலையில் தமிழர் இனங்காக்கும் முயற்சி நடைபெற்றாலும் அதற்குத் தென்றலெனத் தமது இணக்கத்தையும், மாற்றுச் செயல்

www.thamizham.net - Free E book No 7424

முயற்சிகளுக்குப்புயலெனப்பெரும் கண்டனத்தையும் விடுக்கும் அவர், அவரின் பள்ளியிலே பயின்ற அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு அரசிற்குத் துணை போனதில் நமக்கெல்லாம் வியப்பில்லை. தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சியுற வேண்டிய ஒன்றே. அந்நாள் தொட்டுத் தந்தையின் அருகிலும், பின்னாளில் அண்ணாவின் அருமைத் தம்பியுமாகவுமிருந்த இன்றைய தமிழ்நாட்டு அரசின் முதல்வர் திரு. மு. கருணாநிதியும் நம் நலங்காப்பார்; சாம்போதும் கொள்கையைப் பரப்பிய பேரறிஞர் வழி நடப்பார்; இன எதிரிகளைச் சாடுவார்; நம் பெருமை குலைக்கவரும் சிறு துகள்களையும் தூளாக்குவார் என்றே அவருக்குத் துணைபோனோம். ஆனால் திரு. மு. கருணாநிதி அவர்கள் அண்மையில் தமது பிறந்த ஊரான திருக்குவளையில் "அங்காள அம்மன்" கோயிலுக்கும் "கோடிலிங்கப் பெருமாள்" கோயிலுக்கும் சென்று வழிபட்டதோடல்லாமல், திருக்குவளைக்கு வந்ததே அந்தக் குல தெய்வங்களை வணங்கி நல்லருள் பெறவே என்று பேசியிருப்பது நமக்கெல்லாம் வியப்பைத் தந்தது. இன்றளவும் நம்மை ஆரிய அடிமைகள் என்று பறைசாற்றச் சான்றுகளாக அவர்கள் போற்றுவன மார்பு நூலும், கோயிலும், திருவிழாக்களும், இன்னபிற சமயச் சடங்குகளுமே யாகும். இவற்றைத்தெள்ளென அறிந்த கலைஞர், கண்ணுக்கு நோய் வந்ததும் கருத்துமாறிப் பிதற்றியிருப்பது ஆரியப் பார்ப்பனர்களையும், ஆரிய அடிவருடிகளையும் மகிழ்விக்கவா? அல்லது மனங்குலைந்த நிலையோடு அறிவு மங்கிவிட்டது என்பதை நமக்கு வெளிப்படுத்தவா? எஃது எப்படியோ... தவறுகண்டவிடத்துத் தம்வெண்கலக் குரல் எதிரொலிக்கச் செய்யும் பெரியாரின் கண்டனக்குரல் வரவே இல்லையே! இதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை- வெண்ணெய்திரளும்போது தாழி உடைந்தாற் போல, ஒளிபிறக்கும் போது இருள் சூழ்ந்தாற்போல, நல்வாழ்வு மலரும்போது பேரிடியாக வந்தது இச்செய்தி. தமிழர்கள் ஆரியமாயையி லிருந்து விடுபடும் நாள் எந்நாளோ? —அ. ஒப்பிலாமணி, கீரமங்கலம் (அ.நி.), தஞ்சை

## (ம-93) தென்மொழிப் பக்கங்கள் வீணாகவேண்டா...!

ஐயா, உ. த. க. வில் விருப்புளோர் பணி மேற்கொள்ளட்டும். வெறுப்புளோர் விலகி நிற்கட்டும். தென்மொழியின் பொன்னனை பக்கங்களை வீணடிக்க வேண்டா. கு. பூங்காவனம், பெங்களூர்-6

www.thamizham.net - Free E book No 7424

## (ம-94) கண்டனக் குரல்...!

ஐயா, தங்கள் இதழில் வந்துள்ள மடல்கள் பற்றிய எங்கள் கழகத் தீர்மானம் வருமாறு:

"உ. த. க. வின் கொள்கைகளை மடல்கள் என்ற பெயரால் குழப்பிக் கொண்டிருக்கும் 'தென்மொழி'.யைக் கண்டிக்கிறோம். இந்தப் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்"

தங்கள் இதழ்பற்றிய எங்கள் கழகத் தீர்மானத்தை-கண்டனக் குரலை-மதித்துத் தக்கமுறையில் தாங்கள் அமைதி கூறுவீர்கள் என்றும் வருத்தம் தெரிவிப்பீர்கள் என்றும் நம்புகின்றேன். வணக்கம்.

அன்புடன், பறம்பை அறிவன்,
செயலர், உ. த. க. பறம்புக்குடி வட்டக்கிளை.

*(தீர்மானம் என்ற 'பெயரால்' தங்களின் மனக்குழப்பத்தை வெளிப்படுத்தியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.-ஆர்)*

## [ம-95] தென்மொழி வளர...!

தமிழின் வளர்ச்சியில் தங்களுக்குள்ள நாட்டம் அளவிடற்கரியது, தமிழுக்காகவும் தமிழனின் நல்வாழ்வுக்காகவும் தாங்கள் ஆற்றி வரும் எழுத்துப்பணி பெரிது. பெரும் பொருள் முடக்கத்திலும் தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் செய்துவரும் பணியை எண்ணி என் உள்ளம் பெருமிதம் கொள்கிறது தமிழின் வளர்ச்சியில் தங்களுக்கு எவ்வாறு பற்றுதல் உண்டோ, அதேபோன்று தங்களுடைய தென்மொழியின் வளர்ச்சியிலும் என்போன்ற இளைஞர்களுக்கு எப்போதும் பற்றுதல் உண்டு. எனவே தாங்கள் எவ்வகையிலும் சோர்ந்துவிடாமல் தங்களின் எழுத்துப்பணியைத் தொடரவும், தென்மொழி இடைவிடாது கிடைக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமாய்த் தங்களைப் பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

தென்மொழியில் இன்னும் சில சிறப்பான பகுதிகள் இடம்பெற ஏற்பாடு செய்யுங்கள் குறிப்பாகச் சீர்திருத்தப் பாடல்களும், சிறுகதைகளும், கட்டுரைகளும். இடம்பெற்றால் விற்பனையை மிகுக்கலாம் என்பது என் எண்ணம். 2-3 மாதங்களுக்கு முன்பாக தென்மொழியில் "தென்மொழி-நலமில்லை; நீங்கள் நலமா?" என்று எழுதியிருந்ததைப் படித்து என்மனம் பெரும் துயரங்கொண்டது. "என் வியர்வை

www.thamizham.net - Free E book No 7424

யால் விளக்கும் வேளாண்மை, இவ்வளவுதான்'' என்ற வரியைப் படித்தவுடன் என் கண்கள் கலங்கிவிட்டன. வருங்காலத்தில் தென்மொழி பீடுநடை போடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தென்மொழியின் வளர்ச்சிக்காக உருபா ஐந்து தங்களுக்கு விடுத்திருக்கிறேன். ஏற்றுக்கொள்ளவும்.

—ப. தங்கவேலு, மைசூர்-1.

## [ம-96] நான் கூறியது வேறு...!

அன்புடையீர், வணக்கம் பல. 'தென்மொழி' மேழத் திங்கள் இதழ் கண்ணுற்றேன்.

உ. த. க. விற்குக் கொள்கை விளக்கங்கள் கொடுக்க முன்வந்த அன்பர்களின் உணர்வு பாராட்டி வணங்கற்குரியது.

திரு. வையைநம்பி, திரு சி. அறிவுறுவோன் ஆகியோர் மடலில் உள்ள தவறான கருத்துகளை மட்டும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

என்னைப் பெருஞ்சித்திரனாரின் பகைவராக்க முயற்சி செய்கிறார் திரு. சி. அறிவுறுவோன். பெருஞ்சித்திரனாரின் அரசியற் கொள்கைகட்கு மாறுபட்டுத்தான் மடல் எழுதினேனே ஒழிய, அவரது அன்புள்ளத்திற்கு மாறுபட்டு மடல் எழுதினேனல்லேன். பெருஞ்சித்திரனாரின் உயர்ந்த அன்புக்குக் கைம்மாறாக எதனையும் செய்யும் தகுதி எனக்கில்லை. "தம்பி! தம்பி!" என்று உள்ளங்குழைய அழைக்கும் அவரது கள்ளமற்ற வெள்ளை உள்ளத்திற்கு எந்தப் போதிலும் தீமை எண்ணியவனல்லேன் என்பதை என்மனச்சான்று அறியும். வீண்பழி சுமத்த எண்ணும் அறிவுறுவோன் அறியமாட்டார்.

பாவாணர் என் தந்தை போன்றவர். அவரை நான் வெறுப்பதாக, திரு. அறிவுறுவோன் (?) காட்டியிருப்பது என் சினத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது வீட்டுக்கு வந்து உரையாடும் நட்புரிமை இருக்கும் காரணியத்தால் அறிவுறுவோன்(?) மனம்போன போக்கில் புளுகி இருக்கவேண்டா. பாவாணர் அவர்களின் "The Logical Solution to the Language Problem" என்ற ஆங்கில நூலை விற்பதற்காக, 'வள்ளுவர் இல்லத்தின் (என் தியாகராசர் கல்லூரி விடுதி)' ஒவ்வோர் அறை வாயிற்படிதோறும் நானும், திசை மாறிப் போய்விட்ட சில தோழர்களும், அலைந்த அலைச்சலை என் உடன் பிறப்புகள் திருவாளர்கள்: குமராயபுதூர் காளிமுத்தனாரும்,

www.thamizham.net - Free E book No 7424

உ. தகை இராயப்பனுருமே அறிவர். அப்படி அலைந்து மாணவர்களிடம் ஏச்சும் பேச்சும் வாங்கியதோடு தந்தை பாவாணரது மனத்தையும் நிறைவு செய்ய முடியவில்லை என்பது என் உள்ளத்தை மேலும் புண்ணுக்கியது. தந்தை பாவாணர் அவர்களிடம் நான் காட்டும் அன்பில் குறைகூறப் (தந்தை பாவாணர் அவர்களுக்குத்தான் தகுதி உண்டே ஒழிய) பிறர் எவரும் முற்பட வேண்டா.

என்னொத்த இளைஞர் திரு. வையைநம்பி அவர்கள் தம்மை அறுபது அகவைத் தாத்தா ஆகவும் என்னைப் பல் இல்லாத பாப்பாவாகவும் கருதி எழுதியுள்ளார்.

... இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நானும் அன்பர் திரு. சாகுல்அமீதும் தென்மொழிப் பாடல்களை நூற்றுக்கணக்கில் கைபால் எழுதிப் பரப்பினோம். அப்போது இந்த வையைநம்பி 50 காசு கொடுத்துத் தென்மொழியை வாங்கி இருப்பாரா என்பதே ஐயப்பாடு.

நான் கூற விழைந்ததெல்லாம் உ. த. க. வின் நலன் கருதியே. உ. த க. ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோட வேண்டுமெனில் பிறரைத் தாக்குவதைக் குறைத்துக் கொண்டு ஆக்கவழியில் ஈடுபடவேண்டும். இன்றைக்குத் தி. மு. க. வை விட்டால் தமிழுக்குத் தொண்டு செய்ய வேறு கட்சிகள் இல. ஏன் தி. மு. க. வைப் பகைத்துக் கொள்ளவேண்டும்? கலைஞரைவிடத் தமிழுக்குத் தொண்டு செய்வோர் யாருளர்? திரு. காமராசரையும், கல்யாணசுந்தரனாரையும், டாங்கேயையுமா நம்ப முடியும்? எனவே கலைஞரைப் பகைத்துக் கொள்ளாதீர்கள் என்று வேண்டினேன்.

தமிழுக்குத் தொண்டு செய்யப் பல வழிகள் உள. உ. த. க. வின் வழி தனி; என் வழி தனி; இரண்டும் இணையும் இடம் ஒன்றுதான் என்பதைமட்டும் நினைவுகூர்ந்து அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அறவழியில் தமிழ்ப்பணியைத் தொடர்கிறேன்.

என்றும் தங்கள் அன்பன், இ. மறைமலை.

## [ம-97] கடனை நன்கொடையாக ஏற்க!

பைந்தமிழ்ப் பாவலர் அவர்களே, நனி வணக்கம்!

ஐயா! நான் தென்மொழியின் பெருமையையும், தங்கள் நிலையினையும் நன்குணர்ந்துள்ளவன். யான் உ. த. க. கோவை நகரக் கிளையின் துணைத்தலைவர். நான் சுவடி 8-இல் மீனம் இத்

மைப் படித்தேன். அச்சகக்கடன் தொகை அறிக்கையைக் கண்ணுற்றேன். உளம்நொந்தது. இன்று தமிழகத்தில் தனித்தமிழ்க்கொள்கை வலுப்பெற்று வருகின்றது. இதற்கு முதற் கரணியம் தென்மொழியின் தனித்தமிழ்க் கொள்கையும் தொண்டுமே எனில் மிகையாகாது. இஃதொரு புறமிருக்க, நமக்கு எவ்வாறெல்லாம் தொல்லை தரலாம் என எண்ணி, ஏங்கி இருக்கின்றனர் சிலர். கழிசடைப் பனுவல் எழுதிப் பிறரை ஏமாற்றித் தருக்கித்திரியும் எத்தர்களை எதிர்க்க நாம் திண்ணிய எண்ணத்துடன் நிற்போம். நம் தனித்தமிழ்க் கொள்கையை மாநிலம் எங்கும் பரப்புவோம் என இதன்மூலம் தங்கட்குக் கூறுவதுடன், தாங்கள் அச்சகம் அமைக்கக் கடன் தொகை திரட்டினீர்கள்; அப்போது நான் இருபது உருபாவுக்கு, இரு பத்து உருபா சீட்டுகள் வாங்கினேன். அதை இப்பொழுது தங்கட்குத் திருப்பி அனுப்பியுள்ளேன் (எண்: 48, 71) பெற்றுக்கொள்க. நன்கொடையாக வைத்துக் கொள்ளுங்கள் என உள்ள உவப்புடன் இதன்மூலம் தெரிவிக்கின்றேன். வணக்கம். தென்மொழி யன்பன்,

—வேலரங்கன், தடாகம். கோவை-2.

## [ம-98] தனித்தமிழ் நாடே நமது மூச்சு!

தண்டமிழ்த் தலைவ,

இக்கால், தமிழ் பாடமொழியாவது பற்றிப் பெரும்பேச்சு அடிபடுகின்றது. தனியார் கல்லூரிகளின் தலைவர்கள் தமிழைப் பாடமொழியாக்குவதில் சிறிதும் எண்ணம் செலுத்தவில்லை என்பது தெற்றென விளங்கும். ஆதலால் அரசு இதில் தலையிட வேண்டிவரும் என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். இதற்கு 'இந்து', 'ஆனந்த விகடன்' இதழ்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. 'இந்து'வில் ஆசிரியர்க்கு வரும் மடல்கள் தமிழ் திணிக்கப்படுகிறது என்பதைப் பற்றியே உள்ளன. செருமனியிலோ, பிரான்சிலோ அவர்கள் மொழி கல்லூரிகளில் திணிக்கப்படுகின்றது என்று யாரும் கூறமாட்டார்கள் தமிழ்நாட்டில் இவ்வாறு பேசவும் கூடிய அறிவிலிகள் உள்ளனர் என்பதை யறியும்போது உள்ளம் எரிச்சல் கொள்கின்றது.

தமிழ் பாடமொழியாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தருவதற்குத் தலையாய காரணங்களுள் ஒன்று. தமிழர் நடுவணரசலுவலகங்களிலும் வெளிமாநிலங்களிலும் வேலையிழந்து விடுவர் என்பதுதான் இஃது உண்மையே. இதற்கு வழி தமிழையும் நடுவணரசின் ஆட்சிமொழி

www.thamizham.net - Free E book No 7424

யாக்குவதாகும். ஆனால் அஃது என்றும் நிகழாது என்பது வடவரின் சூழ்ச்சித் திறத்தால் புரிகிறது.

உலகத் தமிழ்க்கழகம் அரசியல் கழகமாக மாறினாலன்றி உண்மையான தமிழ்ப்புரட்சி ஏற்படப் போவதில்லை. மக்களின் ஒத்துழைப்பு கழகத்திற்கு இருக்கிறதா என்பதைக் கண்டறிய அரசியலில் நுழைவதே தகுந்த செயலாகும். தென்மொழிக்கு வரும் மடல்கள் யாவிலும் மிக்க வுணர்ச்சி ததும்புகிறது. ஆனால் செயற்திட்டம் ஏதுமிதுவரை நிகழவில்லை. தமிழை நடுவணரசில் ஆட்சிமொழி ஆக்கப் போராட்டம் நடத்த வேண்டும். அதனினுஞ் சிறந்தது தனித்தமிழ் நாடு போராட்டம். தமிழ்நாட்டிற் குடியேறியுள்ள தமிழறியா அரசு அதிகாரிகள், வட்டிக்கடை வைத்துள்ள வடவர், இவர் போன்றோர் வெளியேறினாலன்றித் தமிழும் தமிழரும் முன்னேற வியலாது.

உலகத் தமிழ்க் கழகத்திற்கு இனிச் செயல் ஒன்றுதான் வேண்டும். தனித் தமிழ்நாடு காணும்வரை உலகத் தமிழ்க் கழகம் உறக்கம் கொள்ளலாகாது. 1972 தேர்தல் நடப்பதற்கு முன்பே தனித்தமிழ் நாடு உருவாக வேண்டும். 1972 தேர்தலே நடக்கக்கூடாது. தமிழ் அறியாத எவருந் தமிழ்நாட்டிற் பெரிய பதவிகளையோ சிறு பதவிகளையோ ஏற்றிருத்தல் கூடாது. செருமனியிலோ, பிரான்சிலோ செருமன் மொழியோ, பிரஞ்சு மொழியோ தெரிந்தால்தான் எந்த வேலையுஞ் செய்ய முடியும்! அதுபோன்ற வுயர்ந்தநிலை தமிழ்நாட்டிலும் 1972-க்கு முன் ஏற்பட வேண்டும். உ. த க.வே எழுக! செயல் புரிக! தனித்தமிழ்நாடு நமது மூச்சு! —மகிழ்க்கோ, புதுவை-5.

## [ம-99] தமிழ்-வடமொழி சொல்தொகுப்பு வேண்டும்.

பேரன்புடைய மதிப்பிற்குரிய ஆசிரியர்க்குப் பணிவான வணக்கங்கள். தங்கள் உயர்ந்த குறிக்கோளுடன் கூடிய தமிழ்ப்பணியை எச்சொல்லால் எவ்வணம் இயம்புவதென அறியேன். தங்கட்குத் தமிழகம் என்றென்றும் கடப்பாடுடைத்து.

நிற்க. தற்போது வழக்கிலிருக்கும் வடமொழிச் சொற்களைத் தமிழர்க்கு இனம்பிரித்துக்காட்டி, அவற்றை வழக்கிலிருந்து நீக்க அவற்றிற்கிணையான தமிழ்ச் சொற்களையும் அவர் அறியச் செய்யவேண்டுவது நமது தலையாய கடனென்பதை மிகவும் அன்புடன் தெரிவிக்கிறேன். மேலும், இப்பணியைத் தங்களிதழில் சில பக்கங்களாவது ஒதுக்கித் தொடர்ந்து செய்து வந்தால், தமிழர் மயக்கம் தீரும்; தமி

பூர்வம் இருந்தும் வடமொழிச் சொற்பாகுபாடு அறியாது தமிழெனா வடமொழியைப் பயன்படுத்தும் பல்லோருக்கு அது கலங்கரை விளக்காகும் என்பது வெள்ளிடைமலை.

அன்புள்ள, அருளுடை தங்கள் நற்பணிபோற்றும்,
—மு. கருணாநிதி, திருச்சி-14.

## (ம-100) பெயர் மாற்றம்-புதுமுறை!

யான் ச. இராமசாமி என்ற என் பழைய பெயரினை மாற்றி ச. தமிழ்வேலன் என்னும் பெயரை வைத்துக் கொண்டுள்ளேன் என்பதை உவப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விளத்தம் அதிகார முறையில் 18—3—70-ஆம் நாள் அரசினர் பதிவிதழில் வெளியாகியுள்ளது. அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்: பெயர் மாற்றம் என்பது சிறிய செயல்தானே என்று எண்ணுதல் கூடாது. சிறிய செயலே யாயினும் பலரும் அதனை மேற்கொள்ளின் தமிழ் தூய்மை பெறத் தொடங்கும்- ஆட் பெயர், இல்லத்தின் பெயர், நிலையங்களின் பெயர், தெருப்பெயர், ஊர்ப்பெயர் இப்படிப் படிப்படியாக எல்லாம் தமிழாக வேண்டும். "தென்மொழி"யை விளக்காகவும், பாவாணரைத் துணையாகவும் கொண்டு மறைமலையடிகள் காட்டிய நெறியில் சென்று தமிழை ஓம்பி வாழ்வின் பயனை முழுமையாக அடைதல் வேண்டும்.

சில அன்பர்கள் (யாரையும் குறைகூறுவதாகக் கொள்ளாமல் உண்மை உணர்ந்து திருந்துக) உ. த. க. வின் தொடர்புக்குமட்டும் யாதானுமோர் தனித் தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டு, அலுவலகப் பதிவுகளிலும். வழக்கத்திலும் பழைய (வடமொழிப்) பெயரையே வைத்துக் கொண்டுள்ளனர் இதுவருந்தத்தக்கது. இத்தகு இரட்டைப் புனைவால் பயனில்லை.

அதிகார முறையில் பெயர்மாற்றம் செய்வது அப்படியொன்றும் அரிய செயலன்று. "அச்சக. எழுது பொருள் இயக்குநர், சென்னை-1" என்ற முகவரிக்குப் 'பெயர்மாற்றப் படிவம் தேவை' என்று எழுதினால் படிவம் விடுப்பார்கள். படிவத்தை நிரப்பி அத்துடன் 7-00 உருபா பணமும் விடுத்தால் பெயர்மாற்றம் ஆன விளத்தம் அரசினர் பதிவிதழில் வெளியாகும். (முன்பு தென்மொழியில் வெளியிட்டிருந்த முறை இப்போது தேவையில்லை. முறைமாறியுள்ளது) செயலில் இறங்குக.

அன்பன்,
புலவர். ச. தமிழ்வேலன், சாமிமலை.

www.thamizham.net - Free E book No 7424

"மறைவு அறை"-ஒரு நூலாய்வு.

# "கண்ணகியின் கல்லறை"

ப இராமநாதன், க. இ; ச. இ.(வழக்குரைஞர்) சென்னை.

(நூல்: "The Secret Chamber-a historical, Anthropological and Philosophical study of the Kodungallur temple." by V. T. Induchudan

Published by The Cochin Devaswom Board Trichur; First Edition 1969 (Printed at the Mathrubhumi Press, Cochin-17.

Pages XIV 323; + 12 pages of Plates 3 maps & sketches; Price Rs. 20/-)

1. மேற் குறிப்பிட்ட "மறைவு அறை" என்னும் ஆங்கில நூல் திரு. வி. டி. இந்துசூடன் என்பவர் எழுதியது. கொச்சிக்கோயில்கள் ஆயத்தால் 1969-ஆம் ஆண்டு திருச்சூரில் வெளியிடப்பட்டது. அந் நூலின் தலையாய கருத்து, கேரளத்தில் (கிரங்கனூர் என்று அழைக்கப்படும்) கொடுங்கோளூரில் உள்ள குரும்பக்காவு என்னும் காளி (பகவதி) கோயிலின் தென்கிழக்கு மூலையை ஒட்டி அக்காளியின் கருவறைக்குக் கிழக்கில். நாற்புறமும் மேலும் கருங்கற் சுவர்களாற் புழையேதுமின்றி அடைக்கப்பட்டுக்கிடக்கும் கருங்கல் அறை ஒன்றில் சிலப்பதிகாரக் கண்ணகியின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும், அல்லது அதற்குள் அவள் நினைவு எச்சங்கள் வேறு எவையாகிலும் இருக்கவேண்டும் என்பதாகும்.

2. கொடுங்கோளூர் திருச்சூருக்குத் தென்மேற்கில் ஏறத்தாழ 25 கல் தொலைவில், கடலோரமாக உள்ளது. அவ்வூருக்கு 2 கல் தெற்கில் உள்ள திருவஞ்சைக்களமே பண்டைய சேரர் வஞ்சி என்றும் 4 கல் வடக்கில் உள்ள திருக்கணமதிலகமே குணவாயிற்கோட்டம் என்றும் பலரால் கருதப்படுகிறது.

3. அம்மறைவு அறைக்குள்ளிருந்து நிலத்துக்கடியில் செல்லும் பாதை கோயிலுக்கு வெளியில் ஏறத்தாழ 300 அடி தொலைவில் தரைக்கு வெளியே வருகிறது. அவ்வாறு வெளிவரும் இடத்தில் வாயில் அடைத்து மூடப்பட்டுள்ளது.

4. மூடப்பட்டுள்ள அவ்வறைச் சுவர்களை உடைத்துப் பார்த்தாலொழிய அம்மறைவு அறைக்குள் என்னதான் இருக்கிறது என்று

www.thamizham.net - Free E book No 7424

தற்காலம் உள்ள யாருக்கும் உறுதியாகத் தெரியாது. எனினும் அம் மறைவு அறை கண்ணகியோடு தொடர்புடையது எனக் கருத, திரு. இந்துசூடன் தரும் காரணங்கள், அவர் கருத்துக்களின்படி பின்வருமாறு:—

1. கொடுங்கோளூர் குரும்பக்காவு தொடக்கத்தில் சிவன் கோயிலாக இருந்திருக்க வேண்டும். (இப்பொழுதும் அக் கோயிலில் சிவக்குறி ஒன்று உண்டு). எனவே கண்ணகி இறந்தபின் அவள் உடலோ எலும்புகளோ குன்றக் குரவரிடமிருந்து பெறப்பட்டு அக் கோயிலுள் அம்மறைவு அறை உள்ள இடத்தில் புதைக்கப்பட்டிருத்தல் கூடும். (பனம்பள்ளி கோர்விந்தமேனன் கருத்துப்படி அக் கோயில் அக்காலத்தில் சமண, பௌத்தக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்-கீழே 5-ஆம் பத்தியைக் காண்க). செங்குட்டுவன் நிறுவியது, கண்ணகியின் மாந்த உருவில் உள்ள படிமம் அன்று; நடுகல்லே ஆகவேண்டும். அக்கல் தற்பொழுது மறைவு அறை உள்ள இடத்தில் நடப்பட்டிருக்கலாம். [செங்குட்டுவன் நிறுவிய சதுக்கப்பூதமே கொடுங்கோளூர்க் கோயிலின் வடகிழக்கு மூலையில் தற்போதுள்ள 'சேத்திரபாலன்' என்பர்]. அம்மறைவு அறையின் தளம் தரைமட்டத்திற்கு அடியில் உள்ளதாகத் தோன்றுவதால் அது கல்லறை [Megalith] என்று முடிவு செய்யலாம். ஆண்டுதோறும் சில திருவிழா நாட்களில் மட்டும் காளிகோயிலின் மேற்குச் சுவரில் எப்பொழுதும் அடைக்கப்பட்டுக்கிடக்கும் ஒரு கதவு திறக்கப்பட்டு, அதன் வழியாக் கொடுங்கோளூர்க் குறுநில மன்னரான படிஞாத்தெடத்து சொவரூபம் குடும்பத்தினர் மறைவு அறையின் மேல்பக்கத்து வெளிச் சுவரைக்கண்டு வழிபட இசைவளிக்கப்படுகின்றனர். அப்பொழுது அச்சுவர்முன் ஒரு சிவப்புத்துணி தொங்கும். திரு இந்துசூடனும் அக் குடும்பத்தைச் சேர்ந்தவரே.

2. கண்ணகியின் தொடர்பு ஏற்பட்டபின் அக்கோயில் சமணர் கைக்கு வந்து அவர்கள் ஆளுகையில் அஃது இருந்திருக்க வேண்டும். அவர்களே அக்கோயிலுள்ள ஏழுதாயர் [சப்தமாதர்] படிமங்கள் போன்றவற்றை நிறுவியிருக்க வேண்டும். கொடுங்கோளூர் வட்டாரத்தில் இன்றும் நம்பூதிரி இல்லங்கள் எவையும் இல. சமண பௌத்தருக்கும் பார்ப்பனீயத்திற்கும் இருந்த பகை காரணமாகவே அவை இலவாயின போலும். சமணர்களிடமிருந்து அக் கோயில் பறிக்கப்பட்டபின் காளி அங்கு புகுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7424

குரும்பக்கரவுக்கு 500 சீரடி (½ கி. மீ.) தெற்கில் உள்ள கூரையில்லாத ஒரு சிறு கோயிலில் குரும்பாயம்மா என்று ஒரு படிமம் உள்ளது. அவ்விடமே கொடுங்கோளூர் பகவதி முதலில் இருந்த இடம் என்பர்.

3. கொடுங்கோளூர்க் கோயில் திருவிழாக்களில் தலையாயதும் பெரும்புகழ் பெற்றதும் பரணித்திருவிழா ஆகும். அதற்குப் பார்ப்பனரல்லாதார் ஆயிரக் கணக்கில் வருவர். மலையாளக் "கும்பம்" [பிப்ர வரி–மார்ச்சு] திங்களில் பரணி உடுவன்று அத்திருவிழாதொடங்குகிறது. 'காவுதீண்டல்' என்னும் நிகழ்ச்சி அத் திருவிழாவின் தொடக்கம். அந்நிகழ்ச்சியில் பொற்கொல்லன் ஒருவன் முதலிலும், பின்னர் முன் காலத்தில் தீண்டத் தகாதவராயிருந்த தீயர், ஈழவர் ஆகியவரும், கோயிலுக்கு வந்து அதனைக் கறைப்படுத்தி விடுவதாகக் கருதப்படுகிறது. பரணிநாளுக்குப்பின் ஏறத்தாழ ஒரு கிழமை அக்கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் அம்மறைவு அறையையே கருதி நடைபெறுவது போன்று காணப்படும். பரணித்திருவிழாக் காலங்களில் கேளிக்கைகள் கொடுங்கோளூரில் ஏற்கப்படுவதில்லை. காவுதீண்டலுக்கு வரும் மக்கள், ஆண்பெண் கலவி உறுப்புகள், உடலுறவு பற்றியெல்லாம் பச்சையாகக் கூறும் பாடல்களையும், ஒலிகளையும் பெருங்குரலுடன் பாடியும் எழுப்பியும் செல்வர்; கலவியிற் போன்ற உடலசைவுகளுடன் ஆடியும் செல்வர். காளியின் உடலுறுப்புகள் ஒவ்வொன்றும் விளக்கப்படும். கண்ணகி வழிபாட்டுடன் மழைவேண்டி நடைபெறும் இந்திர வழிபாடும் தொடக்கத்திலேயே சேர்ந்து நடைபெற்றமையின், இப்பாடல் முதலிய நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றனவாகலாம். [ப. கோ. மேனனோ இவை சமண, பௌத்தக் கோயிலைப் பார்ப்பனியம் கைப்பற்றியதைக் கொண்டாடும் முகத்தான் நிகழ்பவையாகலாம் என்பர்–கீழ் 5-ஆம் பத்தி காண்க].

4. பார்ப்பனரல்லாத ['அந்தராளர்' வகையினருள் ஒருவரான] "அடிகள்" என்பவர்களே கொடுங்கோளூர்க்கோயில் வழிபாடுகளை முறைப்படுத்தும் உரிமையுள்ளவர்கள். பரணித் திருவிழா நாட்களில் அவர்களே நேரடியாகச் சில வழிபாட்டு முறைகளைச் செய்வர். மற்ற நாட்களில் நம்பூதிரிப்பூச்சார்த்திகள் மூலமாக வழிபாடுகளைச்செய்வர். [முன்னாளில் 'குருப்பு' களே அவ்வழிபாடுகளைச் செய்ததாகத் தெரிகிறது] அவ்வடிகளின் வீடுகள் மறைவு அறைக்கடியிலிருந்து நிலத்தின் கீழாக வரும் பாதை வெளிவரும் இடத்திற்கு அருகே உள்ளன. அவ்வடிகளில் மிக முதிர்ந்தவர் ஒருவர் இந்துசூடனிடம் கூறிய

www.thamizham.net - Free E book No 7424

கூற்றுப்படி மூதாதையர் வழிபாடு போன்ற சடங்குகளும் அம் மறைவு அறையை வழிபடும் சடங்குகளில் உண்டாம்.

5. கொடுங்கோளூரார் சபரிமலை அய்யப்பன் மகரவிளக்குக்குச் செல்லக்கூடாது என்னும் பழக்கம் உண்டு. அதற்குக் காரணம் மதுரைப் பாண்டியரிடம், அய்யப்பன் தொடர்பு பூண்டமையும், அய்யப்பன் பாட்டுகளில் பாண்டியர் பெருமை பேசப்படுவதும் ஆகலாம். ஏனெனில் கண்ணகிக்குத் தீங்குற்றது மதுரையிலேயே அன்றோ?

6. கொடுங்கோளூரிலும் அதைச் சுற்றிலும் உள்ள பல இடங்களின் பெயர்கள் கழகக்காலச் சேரர்களின் பெயர்களோடும், கழக இலக்கியங்களில் சேரரோடு தொடர்புடையனவாகக் கூறப்பட்டுள்ள இடங்களின் பெயர்களோடும் ஒப்புமையுடையனவாகக் காணப்படுகின்றன. அவை முன் கூறப்பட்ட திருக்கணமதிலகம் [குணவாயிற் கோட்டம்?], திருவஞ்சைக்களம் [வஞ்சி?] ஆகியவற்றோடு கரூர்ப்பட்டணம் [கரூர்] பராவூர் [பறையூர்?], வெண்பல்லூர் [வேண்மாரூர்?], கோதபரம்பர் [கோதைபரம்பு?], கோட்ட கோவிலகம் [கோட்டம்பலம்?], பாலபட்டி [பாலைபாடி?], திருப்ரயாறு [திருப்பொறையாறு?] செர்பு [செருப்பு?], ஆயிரூர் [அயிரை?] செங்குன்று [அடியார்க்கு நல்லூர் "நெடுவேள்குன்றம்" எனக்குறிப்பிடும் திருச்செங்குன்று?] போன்றவையாகும்.

5. அண்மையில் காலமான நடுவண் அரசு அமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனோன் "மறைவு அறை"க்கு ஒரு முன்னுரை தந்துள்ளார். அம் முன்னுரையில், காவுதீண்டலின்போது பாலுணர்வு குறித்த பாடல்கள் பாடப்படுவதற்கு வேறு காரணம் இருக்கலாம் என்கிறார் அவர்.

அவர் கூறுவதாவது:- குரும்பக்காவு தொடக்கத்தில் சமண, பௌத்தக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்; தமிழகத்தில் "குறுநெறிச் சங்கரன் புத்தநெறி மாற்றிட"ப் புன்செயல்கள் பலவும் செய்யத் தொடங்கிய காலத்துக்குப்பின் அது பார்ப்பனீய [இந்து]க் கோயிலாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும்; கோயிலைப் பார்ப்பனீயம் கைப்பற்றுவதைக் கொண்டாடுவனவே அப்பாடல்களும் பிறவும். கோயிலைக் கைப்பற்றியபின் கண்ணகியின் அறையை மூடி மறைவு அறை ஆக்கியிருத்தல் வேண்டும். தமிழகத்திலும் காஞ்சியிலுள்ள அருளாளப் [வரதராசப்] பெருமான் கோயில், காமாட்சிகோயில்

www.thamizham.net - Free E book No 7424

போன்று தற்பொழுது பார்ப்பனியக் கோயில்களாக உள்ள பலவும் புத்த சமணரிடம் இருந்து கைப்பற்றப்பட்டு மாற்றப்பட்டவை என்பது அறிஞர் ஏற்றுக்கொண்ட கருத்து. ஆகலின் மேனோன் கருத்து பொருத்தமுடையதே. தீண்டாமை ஆட்சியிலிருந்து வந்த முற்காலத்திலிருந்து கொடுங்கோளூரில் பரணித் திருவிழாவிலும், சபரிமலை அய்யப்பன் [தருமசாஸ்தாபுத்தன்] திருவிழாவில் எப்பொழுதும் குல வேற்றுமை பாராட்டி வரப்படாமை ஒன்றே அவை இரண்டும் தொடக்கத்தில் சமண அல்லது பௌத்தக் கோயில்களாக இருந்திருக்க வேண்டும் என்பதைக்காட்டும் என்கிறார் மேனோன். அய்யப்பன் கோயிலுக்குச் செல்வோரும் பௌத்தர்போல் "சரணம்" என்னும் சொல்லைப் பயன்படுத்துவதை எடுத்துக்காட்டி, நாட்டிலிருந்து பார்ப்பனியக் கொடுமையால் விரட்டப்பட்டபின் காட்டில் சென்று பௌத்தர் அய்யப்பனை நிறுவியிருக்கலாம் என்பர் மேனோன். எனவே மேனோன் கருத்துப்படி, கண்ணகியின் நினைவெச்சம் நிறுவப்பட்ட காலந்தொட்டுப் பின்னர்ச் சங்கரன் காலத்திற்குப்பின் காளிகோயிலாக்கப்பட்ட காலம் வரையிலும் கொடுங்கோளூர் கோயில் பார்ப்பனியக் கோயிலாக இருந்திராது, சமணபௌத்தக் கோயிலாகவே இருந்து இருக்கவேண்டும்.

6. அறிஞர் இந்துசூடனின் நூல் தமிழ், தமிழக வரலாற்றுக்குத் தொடர்பான, மேற்கண்டவும் பிறவுமான பல அரிய செய்திகளைக் கொண்டது. ○

---

## தென்மொழி, கடலூர்-1.


தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 9 உருபா. | 10-50 உருபா | 13 உருபா. |
| அரையாண்டுக் கட்டணம் | 5 உருபா. | 6 உருபா. | 7 உருபா. |
| தனி இதழ்: | 75 காசு | 90 காசு. | 1 உருபா. |

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7424




"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

## தமிழரசன் கவிதைகள்

### தொகுதி - க.

ஆசிரியர்: திரு. தமிழரசன்.

வெளியிட்டோர்: தமிழரசன் பதிப்பகம், இடைப்பாடி, சேலம் மாவட்டம்.

விலை: உருபா—5.

பாவன்மை என்பது பல்வேறு கூறுகளைக் கொண்டது. கருத்து வளம் அவற்றுள் முதன்மையானது. கற்பனை, சொற்செறிவு, மொழிச் செப்பம், பிற-சொற் கலவா தூயநடை, யாப்பு அமைதி என்பன வற்றை முறையே அதன் பின்வைத்துக் கூறலாம். கழகக்காலம் முதல் இன்றுவரை தோன்றியுள்ள பாடல்களை ஆராய்ந்து பார்க்கின் இவ்வெல்லா நலங்களையும் கொண்ட பாடல்கள் குறைவாகவே இருக்கு மென்பதையும், இவற்றுள் யாதேனுமொரு வகையிற் குறைபாடுடை யனவே மிகுதியாம் என்பதையும் உணரலாம்.

இனி, இவ்வடிப்படையில் திரு. தமிழரசனின் பாடல்களைப் பார்க்கின் அவற்றில் கருத்துவளமும் கற்பனையும் சொற்செறிவும் காணப்படினும், பிந்திய மூன்றும் இன்மையைக் காணலாம். இத் தொகுதியுள் உள்ள எழுத்துத் தெய்வதம், ஞானத்தேர் என்னும் பகுதிகள் பொருட்செறிவுற்றுப் பொலிகின்றன. படையணி என்னும் தலைப்பில் அமைந்த "அறிவில்லை நெறியில்லை" எனவரும் பாடலும் (பக்கம்–51) கொட்டு! என்னும் தலைப்பில் உள்ள "அன்பின்வழி நில்லார் தூதர்", "ஒட்டி யுறவாடும் சுற்றம்" (பக்கம்-68,69) என்னும் பாடல்களும் சிறப்புற யாக்கப்பெற்றுள. ஆனால் நூலுள் செறிந் துள்ள குறைகளைக் கூறாமல் இருக்க முடியவில்லை. ஒற்று மிகவேண் டிய இடத்தில் மிகாமையும், மிகவேண்டா இடத்தில் மிகுதலும்,

www.thamizham.net - Free E book No 7424

தவறான சொல்லாட்சியும், சிதைந்த சொற்களும், பொருள் தெளிவற்ற சொற்களும், கூறியது கூறலும், ஒரே பொருளுடைய பல சொற்கள் பயனின்றிப் பலகால் வருதலும், இழிபொருள் அமைந்த தொடர்களும் இவர் பாடல்களில் மொழிச்செப்பம் இன்மைக்குச் சான்றாகின்றன.

க. ஒற்று மிகவேண்டிய இடத்தில் மிகாமை :-
"தேய்ந்து மறைதலை (த்) தேற்றம் என்றுரைப்பேன்" (பக். 6) நிறைத்தலை (த்) தூய்மை என்றழைப்பேன் "(பக். 6)" பரவிட (ப்) பாரில் அழைப்பிடுவேன் (பக்-6) முதலியன.

உ. ஒற்று மிகவேண்டா இடத்தில் மிகுதல்:- "சீர்மைத் தேக்கிடத் திறமிதே" (பக். உ) "குவிகின்ற வளமிக்கப் பேறும் (பக். 5), "மலர்ச்சிப் பெறுதல்" (பக் 6), "நெருப்பணையச் சூதர்" (பக். 9), "செம்மை கொண்டக் கல்வியைச் சென்று கொண்டுப் பண்ணிடு "(பக். 26)," மகிழ்ந்துப் பரிசளித்தார் "(பக். 31), பட்டித் தொட்டி "(பக். 65)," கெட்டப் புன்மை "(பக்-65) வேகமொடு (த்) துடித்து (பக். 66),

ங. தவறான சொல்லாட்சி:- 'வேற்றுமை கூற்றிடும் பேடியர்' (பக். 1) "புழை வசைகள் பேசிநின்று" (பக் 41), மதிநிலை வளர்த்தவர் கோட்டம் (பக். 44) "பகன்றனர் சான்றவர்" [பக்.59],

[குறிப்பு:- 1." வேற்றுமை கூறிடும் "என்றிருத்தல் வேண்டும். "வேற்றுமையாகிய பிரிவுகளை யமைக்கும்" என்பது பொருளாயின் "வேற்றுமைக் கூற்றிடும் என்றமைதல் வேண்டும். 2. புழை என்பது "துளை" எனப் பொருள் படுவதாகலின், வசையென்னும் சொல்லுடன் எவ்வாற்றானும் தொடர்புடையதன்று; "குற்றம் பற்றிய வசைகள்" என்பது கருத்தாயின் புரை என்னும் சொல் கையாளப்பட்டிருத்தல் வேண்டும். 3. கோட்டம் என்பது கோயிலையே குறிக்கும். குழு அல்லது கூட்டம் என்னும் பொருளில் இங்குக் கையாளப்பட்டுள்ளது. 4. பகர்ந்தனர் என்பதே நேரிய வடிவம்; "பகர்" என்பது முதனிலை. பகன்றனர் என்பது தவறானது.]

ச. சிதைந்த சொற்கள்:- "மூதிப் பதடியினம்" [பக். 10]; "சோற்றுண்டை" [பக். 50]

www.thamizham.net - Free E book No 7424

[குறிப்பு;- 1. மூதேவி என்னும் சொல்லின் திரிபாகிய வழக்குச்சொல் மூதி 2. உருண்டை என்பதன் சிதைந்த வடிவம் உண்டை]

ு. பொருள் தெளிவற்ற சொற்கள்:- காடர், மாடர் என்ற சொற்களை அடிக்கடி கையாளுகின்றார். காடன், மாடன் என்பன சிறு கடவுளர் பெயர்களாகப் பாரதி பாடல்களிற் குறிக்கப்படுகின்றன. அவற்றைப் பன்மை வடிவத்தில் எப்பொருள் கருதிக் கையாள்கின்றார் என்பது தெளிவாகவில்லை. இவ்வாறே இவர் வழங்கும் சேடு, சீழ் என்பனவும் பொருள் தெளிவின்றிக் கையாளப் பட்டுள்ளன. இவ்விரண்டனுள் சீழ் என்பது தவறான சொல் வழக்கு. 'சீ' என்பதே நேரிய வடிவம். "தோலெலும்பு சீ நரம்பு" என்றார் திருப்புகழார்.

சு. கூறியது கூறல்:- "வெற்றி மேவிக் கொற்றம் மேவி" [பக். 18] "நேரும் வெற்றி வாகை கொள்ள" [பக். 20] "நேர்மை வழி முறைகள் உன்னை, நெடிது வளர்த்தும் உனை" [பக். 11] "உண்டாடி உண்டாடி நான் உவந்த தமிழை, உயிர் வளர்த்த பேறென்று, நான் போற்றிப் போற்றி" [பக். 13 "பீடாளும் நாடாளப் பாரதத்து மண்ணில், பீடெழவே பாடுமின்றே வீரப் போர்ப்பரணி" [பக். 55.]

எ. ஒருபொருட் பலசொல் பலகால் வருதல்:-

"அகங்காரச் செருக்கரிடம் பிணைந்திருக்கும் செல்வம்
ஆணவத்தால் பெருமழிவை வறியருக்குச் செய்யும்" [பக்.51]

"ஆங்காரம் அகம்பாவம் ஆணவத்தின் கூச்சல்" [பக். 85]

அ. இழி பொருள் கொண்ட தொடர்கள்:-

"மணமென்று மலந்தந்து புசியென்று செல்வர்
மாற்றார்க்குக் கூறுதலைச் செவியுற்ற பல்லோர்
குணமென்றும் சுவையென்றும் சுகமென்றும் கூறி
குவைமலத்தைப் புசிக்கின்ற காட்சிநிலத் துண்டு." [பக். 51]

"புவியில் அவர்பழஞ் செருப்பு—கழிவுப்
புறத்துத் துடைப்பக் கட்டை" [பக். 92]

மற்று, இவர் தம் பாடல்களில் விரவியுள்ள வடசொற்கள், மொழிநடையின் தூய்மையைக் கெடுப்பனவாய் உள்ளன. அவை

www.thamizham.net - Free E book No 7424

வருமாறு: கவி, ஞானம், கவிதை, சரிதம், சுகம், பாமரம், சீலம், ஆங்காரம் [அகங்காரம்], வேதனை, சகித்து, கீதம், சனம், துதி, கோரம், யுகம், சோதரர், [சகோதரர்] வர்க்கம், சோரம், சுதந்திரம், வாரிசு, கௌரவம், சிம்மம், அந்தகர், தரிசு, உலுத்தர், நிருவாணம் இன்ன பிற.

அடுத்து, யாப்பு அமைதி. மோனைத்தொடை பிழைபடல், சீர்கள் தவறுதல், ஓசை குறைதல் ஆகியன இவர் பாடல்களிற் பொது வாகக் காணப்படும் யாப்புக் குறைபாடுகளாம். எடுத்துக்காட்டாகச் சில: -

*"கெஞ்சிட்டுத் தொழுதலைவர்–பின்னும்*
*குலைந்து துயர் பெறுவார்".* [பக். 32]

*"நேற்றைத் தவறுகளை—நெடிது*
*நொறுக்கிக் கரித்தவராய்"* பக், 33]

*"பயம்களைந்து துணிவணிந்து வீரராய்த்*
*துறையனைத்தும் தொழிலாளர் கிளம்புவோம்."* [பக். 43]

*"தோலை மினுக்கித் திரிந்திருந்து–திண்ணைத்*
*தெருவில் அமர்ந்து பழிபேசி".* [பக். 48]

இவைபோன்ற, மோனைத் தொடை பிழைபட்ட இடங்கள் பல.

"கொண்டாடிக் *கொண்டாடி எனைவளர்த்த* தமிழைக்
கொச்சை *மொழியாக்கிக் குறைகூறும்* கூட்டத்தை [பக். 13]

முதல்வரியின் முதற்சீர் மூவசைச்சீர்; ஆனால் இரண்டாம் வரியின் முதற்சீரோ ஈரசைச்சீர்! முதல் வரியின் நான்காம் சீர் ஈரசைச் சீர்.! ஆனால் இரண்டாம் வரியின் நான்காம்சீர் மூவசைச்சீர் இவை போன்று சீர்கெட்ட இடங்கள் பற்பல.

*"ஓங்காரம் ஓம் ஓம் ஓமென்று முழங்கு"* [பக். 88]

இரண்டாம் சீரில் ஓசை குறைகிறது. இன்னும் ஓர் 'ஓம்' போட்டிருத்தல் வேண்டும்.

மற்றும் ஒன்று:

"குமிழ்ப்பூ *வெனும்* இதழ் *வாயினர்"* [பக். 35]
*என்கிறார்.*

குமிழம் பூவைப் பெண்ணின் மூக்கிற்கு உவமை கூறியதன்றி, எப்புலவரும் இதழுக்கு ஒப்புக் கூறினாரில்லை. நம் தமிழரசனார் எவரிடம் அணியிலக்கணம் பயின்றாரோ; யாம் அறியேம்!

www.thamizham.net - Free E book No 7424

ஆசிரியர் பிழை இவ்வளவில் நிற்க, இனி, அச்சுப் பிழைகளை நோக்குவோம்.

பாவேந்தரின் பாராட்டில், இரண்டாம் பாடல் 4 ஆம் வரியில் இரண்டாஞ் சீரில் பாற்றவில் என ஒருசொல் அச்சாகியுள்ளது. இதன் உண்மை வடிவம் என்னவோ!

மற்றவை:

*"கேடர் சழக்கினம் பூமிநமதினில்*
*கேடு விளைத்திடுமோ"* *[பக். 7]*
*"நிமர்கின்ற நிறவேல்"* *[பக். 24]*
*"விழ லுக்கு நீர்பாய்ச்சும் மடச் செய்கைச் செய்யோம்* *[பக். 53,*
*"நீடு வாழிய நீடுழி வாழ்கவே"* *[பக். 60]*–இன்ன பிற.

இறுதியாக, திரு. தமிழரசனாரின் சந்தப்பா வன்மையைக் காண்போம். இவரது வண்ணப்பாத் திறனைப்பலரும் வியந்து பாராட்டியுள்ளனர் அவர்தம் பாராட்டு மொழிகள் எவ்வளவிற்குப் பொருத்தம் உடையனவோ?

வண்ணப்பாவின் [சந்த யாப்பின்] அமைப்பினை நோக்குவோம். சந்தங்கள் எட்டு. அவை; தன, தான, தந்த, தாந்த, தத்த, தாத்த தன்ன, தைய என்பன. இவை தனதான, தந்ததன என்றாற் போல இணைந்து வருதலே யன்றி, தனத்தான, தனதானு என்றாற்போல இடையிலும் ஈற்றிலும் திரிபுற்றும் வரும்.

இனி, இச்சந்தங்களை ஒவ்வோரடியிலும் ஓசைவழுவாது நிரல்பட அமைத்தலே வண்ண யாப்பின் அடிப்படை இலக்கணம் ஆகும். ஆயின் அவ்வாறமைத்துப் பாடுதல் அத்துணை எளிதன்று; அரியவற்றுள் அரிதாம். அதனாற்றான், "ஆசு வலவர்க்கு வண்ணம் புலியாம்" என்றார் ஒளவையார். 'ஆசு' என்பது, குறித்தபோழ்தில், குறித்த பொருள் பற்றிக் குறித்த யாப்பில் விரைந்து இயற்றப்படும் பாடலைக் குறிக்கும். அத்தகைய பாடலில் வல்லவர்க்கே வண்ண யாப்பு அச்சந்தருவதாயின், ஏனையோர் எத்துணை அஞ்சுவர்!

*வண்ண யாப்பின் அருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.*

*"பக்கரைவி சித்ரமணி பொற்கலனை இட்டநடை*
*பட்சியெனு முக்ரதுர கமுநீப*

www.thamizham.net - Free E book No 7424

*என்பதில் இறுதிச்சீர் தனதான என்ற சந்தம் கொண்டது. ஆனால், அப்பாடலின் இறுதிப் பகுதியில்,*

*'வெற்பகுடி லச்சடில நற்பரம ரப்பருள்*
*வித்தகம ருப்புடைய* **பெருமாளே**

*என்பதன் இறுதிச்சீர் தனதானா என்ற சந்தம் உடையது. எனவே, வண்ண யாப்பின் இலக்கணப்படி இது தவறேயாம்.*

இவ்வாறு வண்ண யாப்பில் வல்லவரான அருணகிரிநாதரையே தொடக்க நிலையில் பிழைபட வைத்த அரிய சந்த யாப்பினை மிக எளிமையாகவும், அதனை மேற்கொள்ளுதலில் தம்மைத் திறம் மிக்கவராகவும் கருதிக்கொண்டு,

"*ஒண்டமிழ் ஞானமொழி* **சந்தமெழப் பாடி**" *(பக்-14)*

**"சந்தக் கவிமொழிவேன்,'** *(பக்-101)*

என இவர் தருக்கிக் கூறுவதையும், இவரை அருணகிரி மரபில் வந்தவர் என்றும், தமிழுக்குத் தலைவனான குமரக்கடவுள் இவரிடம் குடிபுகுந்துவிட்டார் என்றும் சிலர் புகழ்ந்திருத்தலையும் நோக்குமிடத்து, இன்னோர் தம் அறியாமை குறித்து இரங்குவதன்றி, வேறென்செய வல்லேம்!

தமிழரசனது சந்தயாப்புப் பிழையைக் காட்டச் சில சான்றுகள்: முதற்பாடலில் முதலடியின் சந்தம்:

*"தந்த தானன தந்த தாந்தன*
*தந்த தானன தனதான"*

ஆறும் அடி:

*"தந்த தானன தந்த தானன*
*தந்த தாந்தன தனதான"*

ஏழாம் அடி:

*"தந்த தாந்தன தந்த தானன*
*தந்த தாத்தன தனத்தான"*

எட்டாம் அடி:

*"தந்த தானன தந்த தானன*
*தந்த தானனத் தனதானா"*

அடிதோறும் சந்தங்கள் ஒழுங்குற அமையாமல், பிறழ்ந்து வந்திருத்தலைக் காண்க.

www.thamizham.net - Free E book No 7424

# உயிரும் கூர்தலறமும்

-தமிழநம்பி.

முன்னுரை:

இவ்வுலகில் குச்சில்கள் (Bactoria) முதல் மாந்தன் அறிந்தும் அறியாமலும் இலக்கக் கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. இவ்வுயிர்களின் அறிவிலும், உருவிலும், உணர்விலும், உணவிலும் மற்றும் வாழ்க்கை முறைகளிலும்தான் எத்தனை யெத்தனைவேறுபாடுகள்! தருக்கித்திரியும் மாந்தனின் செருக்கடக்கும் விலங்குகளும் நிலைத்திணைகளும் எப்படித் தோன்றினவோ? உயிர் முதன்முதலில் எங்ஙனம் தோன்றியது? உயிரினங்களுக்குள் காணப்பெறும் வேற்றுமைகளுக்குக் காரணம் என்ன? இத்தகைய வினாக்களில் பெரும்பாலானவற்றிற்கு விடையளித்து விளக்குகின்றது சுவை மிக்க உயிரியல்.

உயிரின் தோற்றம்: உலகில் உயிரின் அடிப்படைத் தோற்றத்தைப்பற்றி பல்வேறு கருத்துகளைத் தருகின்றனர் உயிரியல் அறிஞர்கள். ஒருசிலர் உயிர்கள் வேறு கோள்களினின்றும் வந்திருக்கலாமென்கின்றனர். அடிப்படைத் தோற்றத்தை விளக்காததாலும், கடுங்குளிரும் மிகுந்த வெப்பமும் கதிரியக்கமும் உடைய வெளியைக் கடந்து வந்ததெங்ஙனம் என்பதை விளக்க வியலாததாலும் இவர்கள் கூற்று வலுவிழந்தது.

புலம்பனில் (ஆன்மா) நம்பிக்கையுள்ளவர்களும் கருத்திற்கு முதலிடம் அளிப்பவர்களுமான கருத்து முதற்கொள்கையர்(Idealist)

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பொதுவாகக் கூறின், தமிழரசன் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கல்லாதவர் என்பதும், அரைகுறையான கல்வி, கேள்வியின் துணைக்கொண்டும் முன்னணிப் பாவலர்களைப் பின்பற்றியும், சொற்களைப் பின்னிப் பிணைத்துச் செய்யுளியற்றிப் புலமை மிக்கவர் போற் காட்டிப் பிறரை மருட்சியுறச் செய்பவர் என்பதும், நுண்ணறிவாளர்க்குத் தெள்ளிதிற் புலனும்.

இத்தகைய இவர்,

*"கொண்டாட்டம் கொண்டெங்கும் கும்மாளம் செய்தே*
*கொடிதரித்து முடிதரித்த தமிழரச னுவேன்"*

எனத்தம்மை நனிவியந்து பெருமைப்படுத்திக் கொள்வது, நல்லறிவாளர்க்கு நகைப்புத் தருவதேயாம். —நக்கீரன்.

www.thamizham.net - Free E book No 7424

களில் பெரும்பாலானவர்கள் (பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களுட் பட) இவ்வுலகமும் அதிலுள்ள பொருள்களும் உயிர்களும் இறைவ னுற் படைக்கப்பட்டவை என்றே நம்புகின்றனர். "உயிர்களும், பிற வும் பல்வேறு காரணங்களாலும் சூழ்நிலையின் நெருக்கத்தாலும் மாறி மாறிப் புதிய உயிரினங்களாகி விட்டன" என்று சான்றுகளுடன் நிறுவப்பட்டதால் உயிரினங்கள் இறைவனுற் படைக்கப்பட்டவை என்ற கூற்று மதிப்பிழந்தது.

அடுத்து, "பொருளே (Matter) அனைத்திற்கும் அடிப்படை; புலம்பன் என்று எதுவும் இல்லை" என்று கூறும் பொருள் முதற் கொள்கையருள் (Materialist) ஒருவரான உருசிய உயிரியல் அறிஞர் ஏ. ஐ. ஒபாரின் அவர்கள் வேறு கருத்தைத் தருகிருர். "வளியின் அமுக்கம் காரணமாக சூரியனும் மற்றைய கோள்களும் ஏற்பட்டன; சூரியனிலிருந்து தெறித்து விழுந்த பகுதியே நாம் வாழும் உலகம். பிரிந்தபோது நெருப்புக்கோளமாக இருந்த இவ்வுலகைச் சுற்றிக் கரிப்பொடி முகிலைப் போலப் படலமாகச் சூழ்ந்திருந்தது. நாளடை வில் இது உலகின் நடுவிலிருந்த மாழைக் குழம்புடன் கலந்தது. அப்போது இருந்த மிகு வெப்ப நிலையில் நீராவி, கரி, இரும்பு முத லியன சேர்ந்தபோது கரியங்கள் (Carbide) என்னும் கூட்டுப் பொருள்கள் உண்டாயின. இதை நீரியத்துடன் (Hydrogen) சேர்த்து கரிநீரியப் பொருள்கள் ஆயின. சிலகாலம் சென்றபின் உலகில் அம் மோனியம் (Ammonia) உண்டாயிற்று. இந்த வேதியற் பொருள்கள் எல்லாம் கடல்களிலே கரைந்து கிடந்தன. இவற்றின் சேர்க்கையி ஞல் பல புதிய பொருள்கள் உண்டாயின முதலில் தோன்றியவை எளிய அமைப்புடைய புரதங்கள். இவற்றின் அமைப்பு சிக்கலாக ஆகப் பல புதிய பண்புகள் ஏற்பட்டன. இத்தகைய வேதியற் சேர்க் கையின் ஒரு கட்டத்தில் தோன்றிய ஒரு புரதம்தான் உயிர்ப்பொருள் (Protoplasm). எனவே, ஒரு குறிப்பிட்ட வரிசையான மாறுதல் களின் தவிர்க்க முடியாத விளைவுதான் உயிர்." என்று ஒபாரின் கூறி ஞர். ஆனுலும் அவருங்கூட சூரியனும் ஏனைக் கோள்களும் தோன் றக் காரணியமான வளிகளின் தோற்றத்தை விளக்கிஞரில்லை! உயி ரற்ற பொருள்களினின்றும் கூர்தலற முறைப்படி உயிர் தோன்றி யிருக்கக்கூடுமென்ற கருத்தை பிளுகர் (Pfluger) ஆல்டானே (Haldana), பியூட்டனர் (Beutner) என்பாரும் கூறுகின்றனர்.

www.thamizham.net - Free E book No 7424

கூர்தலறம்: பல வகைகளில் ஒன்றை ஒன்று ஒத்திருப்பவையும் தம்முள் இனப்பெருக்கம் செய்யக்கூடியவையுமான உயிர்களை ஓர் இனம் என்று சொல்வர்.

இனத்தோற்றத்தையும் இனங்கள் சூழ்நிலைக்கு ஏற்பப் புதிய குணங்களைப் பெறுவதையும், இறந்து அழிவதையும் கூர்தலறம் (Evolution) கூறுகிறது என்பார் சூலியன் அக்சுலி என்ற அறிஞர்.

கூர்தலறத்திற்கான காரணங்கள்: சூழ்நிலையை உணவு, இருப்பிடம், குளிர்வெப்ப நிலைகள், சூழ்ந்துள்ள உயிர்கள் முதலியவை குறிக்கின்றன. சூழ்நிலைகூர்தலற வளர்ச்சிக்குக்காரணம் என்பதற்குப் பாலைநிலத்து ஒட்டகம், ஆழ்கடலில் வாழும் பெருத்த வாயும் சிறுத்த உடலும் உடைய மீன்கள், இலைப்பூச்சி, குச்சிப்பூச்சி, விரியன்போல் தோன்றும் வழலைப் பாம்பு முதலியவை சான்றாக உள்ளன.

ஓரினத்தின் விலங்குகளுக்குள்ளும் எத்தனையோ வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. நாய், மாடு, ஆடு, மான் முதலிய இனங்களுக்குள்ளே பலப்பல வகைகள். மாந்தன் ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், சீனத்திலும் இந்தியாவிலும் வெவ்வேறு உருவுடன் காட்சி தருகின்றான். வேறுபாடுகள் பெரும்பாலும் நிறம், உறுப்பு அமைப்பு முதலியவற்றால் ஏற்படுகின்றன. இவ் வேறுபாடுகளும் கூர்தலற வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கின்றன.

வரையறுக்கப்பட்டநெறிமுறைகளுக்குட்பட்டுப் பெற்றோர்களின் தன்மையைக் குழந்தைகள் பெற்றுள்ளனர். பெற்றோரின் தன்மைகள் தெரிந்தால் குழந்தைகளில் அவை எங்ஙனம் அமையக் கூடுமெனச் சொல்ல வியலும் என்று ஒன்பதாண்டு ஆய்விற்குப்பின் மெண்டல் என்னும் ஆத்திரியப் பெரியார் கூறினார். உயிரின் ஒவ்வொரு தன்மையும் இரு உயிர்க்கருக்களாற் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவற்றில் ஒன்று தாயிடமிருந்தும் மற்றொன்று தந்தையிட மிருந்தும் கிடைக்கின்றன. இவை ஒரே ஆற்றலை உடைய வகை அல்ல. பெற்றோருள் ஒருவர் நிறம் கருப்பாக இருந்து கருப்பு உயிர்க்கருவின் ஆற்றல் மிகுதியாயிருந்தால்—பெற்றோருள் ஒருவர் நிறம் மட்டுமே கருப்பாயிருந்தபோதிலும் குழந்தையின் நிறம் கருப்பாகவே அமைகிறது. இருப்பினும் கருப்பு உயிர்க்கருவின் ஆற்றல் மிகுதியாயிருந்தும்கூட நான்கு தலைமுறையில் ஒரு குழந்தை சிவப்பாகவும் அமைகிறது.

www.thamizham.net - Free E book No 7424

எனவே, பெற்றோர்வழி இயல்பும் கூர்தலறத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

கூர்தலறச் சான்றுகள்: தாயினத்தினின்றும் புதிய இனம் பிரிவதை நாம் கண்கூடாகக் காண முடியவில்லை என்றாலும் பொதுவான முன்னோர்களிலிருந்து கூர்தலற வளர்ச்சியில் தோன்றியவையே பல்வேறு உயிரினங்கள் என்பதற்கு உடலமைப்பு, கருவளர்ச்சி, பழங்கால வரலாறு, உயிரினப் பாகுப்பாடு ஆகியவனைத்தும் சான்றுகளாயிருந்து விளங்குகின்றன.

மாந்தனுக்கும் குதிரை, ஆமை, வௌவால், பறவை, திமிங்கலம் ஆகியவற்றிற்கும் பொதுவான அடிப்படை உடல் அமைப்பு உள்ளமை முன்கால் அல்லது கைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தெளிவாக விளங்கும். மேற்குறித்த உயிரினங்கள் அனைத்திற்கும் தொடை எலும்புகள், கீழ்க்கால் எலும்புகள், கணுக்கால் எலும்புகள் இருக்கின்றன. இவ்வொற்றுமை தசை, நரம்பு, நுண்குழல்களிலும் இருக்கின்றது. கூர்தலறக் கூற்றுப்படி, இவை யனைத்தும் ஒரு தாயினத்தினின்றும் சூழ்நிலைக்குத் தக்கவாறு உறுப்புகளை மாற்றி அமைத்துக் கொண்டு உருமாறி விட்டவையாகும்.

ஒரு தனி உயிரின் கரு வளர்ச்சி அவ்வினத்தின் குலவளர்ச்சியின் சாயலைத் தருகின்றது. இதையே சாயல் (பிரதிபலிப்பு)கொள்கை (Recapitutation Theory) என்று செருமானிய ஆய்வாளர் ஏக்கல் என்பார் முதலில் விளக்கினார். எடுத்துக்காட்டாக மீன், தவளை, பாம்பு, பறவை, பாலூட்டிப் பிரிவைச் சேர்ந்த சில விலங்குகள் ஆகியவற்றின் கருவளர்ச்சியின் முதல் நிலையில் காணப்படும் ஒற்றுமை கவனிக்கத்தக்கது. இந்த நிலையில் தேர்ந்த ஆய்வாளருக்குங்கூட எந்தக் கரு எதனுடையது என்று கண்டுகொள்வது அரிதாயிருக்கிறது. கரு வளர வளர இவற்றுள் வேற்றுமை மிகுவதையும் காணலாம். கருவின் வெளித் தோற்றத்தில் மட்டுமன்றி உறுப்பு வளர்ச்சியிலும் இத்தகைய ஒற்றுமையைக் காண முடிகிறது.

இவ்வுலகின் தளம் பெரும்பாலும் பாறைகளால் ஆனதே. மழைநீர் மணலை அறுத்துச்சென்று கடலில் கொட்டுவதால் மணல்மேல் மணல் படிந்து கோடிக்கணக்கான ஆண்டுகட்குப்பின் அழுக்கத்தால் இறுகியதால் பாறைகள் ஏற்படுகின்றன. இவை படிவுப் பாறைகள் (Sedimentary Rocks) எனப்படுகின்றன. இப்பாறைகளில் உள்ள விண்ணியம் 338 (Uranium 338) காலம் செல்லச் செல்ல ஒருவகை

www.thamizham.net - Free E book No 7424

ஈயமாக மாறிவிடுகின்றது. இம்மாறுதல் மிகமிக மெதுவாக நிகழ்ந்து நாற்பதிலக்கம் ஆண்டுகளில் இவ்விண்ணியத்தில் பாதி ஈயமாகமாறி விடுமாம். எனவே, ஒரு பாறையிலுள்ள ஈயத்தின் அளவைக்கொண்டு அது படிந்து எத்தனை ஆண்டுகளாகின்றன என்று கண்டு பிடித்து விடலாம். இத்தகைய பாறைகளில் அவ்வக் காலத்தே வாழ்ந்த நிலைத்திணைகள், விலங்குகள் ஆகியவற்றின் எச்சங்களாக புதைபுயிர்த் தடங்கள் (Fossils) காணப்படுகின்றன. இத்தடங்கள் கூர்தலற வளர்ச்சிக்கு அசைக்க முடியாத சான்றுகளாயுள்ளன.

நெருங்கிய உறவுள்ள இனங்களின் உடலில் உண்டாகும் சாறுகள் உப்புப் பொருள்கள் ஆகியவற்றின் அளவும் அமைப்பும் ஒன்று போலவே இருக்கின்றன. உறவற்ற இனங்களில் இவ்வொற்றுமை இல்லை. இதனால் உடலின் சாறுகள் உப்புப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டே இனங்களின் உறவை உறுதி செய்யலாம். இதன்மூலம் கூர்தலறத்திற்கு வேதியல் சான்று தருகின்றது.

மேலும், இனங்களின் உறவை அவற்றின் நோய்கள், சார்பு உயிர்கள் ஆகியவற்றாலும் கண்டுகொள்ள முடிகிறது. 'யா' என்னும் எலும்பையும் சதையையும் தாக்கும் ஒருவகை நோய் மாந்தவினத் திற்தும் வாலில்லாக் குரங்கினத்திற்கும் மட்டுமே உண்டாகிறது. சளிக்காய்ச்சல், சொறி, சிரங்கு, இளம்பிள்ளை இழுப்பு, கக்குவான், நச்சுக்காய்ச்சல். காய்ச்சல், பித்தஇழுப்புக் காய்ச்சல், அம்மைபோன்ற நோய்கள் மேற்குறித்த இரு இனங்களுக்கே காண்கின்றன.

அறிஞர்கள் உலகிலுள்ள கோடிக்கணக்கான உயிர்களை ஆய் விற்கு ஏந்தாகப் பல பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். இற்றை வழக்கி லிருக்கும் பாகுபாட்டை 1707-ஆம் ஆண்டில் இலினேயசு என்ற பிரெஞ்சு அறிஞர் முதன் முதலில் வெளியிட்டார். உயிரினங்கள் அனைத்தும் முதலில் நிலைத்திணைகள், விலங்குகள் என இரண்டு மிகப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. விலங்குகளில் முது கெலும்புள்ளவை, முதுகெலும்பில்லாதவை என்று இரு பெரியதுணைப் பிரிவுகள் உள்ளன. முதற்பிரிவில் மீன், தவளை, ஊர்வன, பறவை. பாலூட்டி என்று ஐவகை யுள்ளன. முதுகெலும்பில்லாத விலங்கு களில் உருமாற்றி [அமீபா-Amocba Gr. Amoibe (Change)-Ameibo, (to Change) விருப்பப்படி வடிவ உருவத்தை மாற்ற வல் லது] கடற்பஞ்சு, பவளம். மண்புழு, பூச்சி. சிப்பி, உடுமீன் ஆகிய எட்டும் அடங்கும். இவற்றுள் பல துணைப்பிரிவுகள், குடும்பங்கள்,

www.thamizham.net - Free E book No 7424

துணைக்குடும்பங்கள், வகுப்புகள் இனங்கள் அடங்குகின்றன. இவற்றுள் மிகச் சிறிய தொகுதியே இனம் எனப்படுகின்றது. நிலைத்திணைகளின் பூவுள்ளன பூவில்லாதன என்று இருபெரும் பிரிவுகளுள் பூவுள்ளவற்றில் மூடிய விதையுள்ளன, மூடாத விதையுள்ளன என இரு பகுப்புகள். கடற்பாசி (Alga) காளான், பாசி, பரணி ஆகிய வனைத்தும் பூவில்லாத பிரிவின. ஒவ்வொரு பிரிவிலும் துணைப் பிரிவிலும் பொதுவான தன்மைகளையும் தோற்றங்களையும் காண முடிகிறது இதனால் இப் பகுப்பே ஒரு கூர்தலறச் சான்றாகி யுள்ளது.

இன்று நெல், கம்பு, சோளம் முதலிய கூலங்களிலும் பழ வகைகளிலும் பல கலப்பினங்கள் பொறுக்கி எடுத்த தாயினங்களிலிருந்து உண்டாக்கப்படுகின்றன. நம்மால் புதிய இனங்களை உண்டாக்க முடியும் என்பதே கூர்தலறத்திற்கு மறைமுகச் சான்று என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மாந்தனின் தலையீட்டால் புதிய இனங்கள் உருவாவது போலவே இயற்கையிலும் இனங்கள் உண்டாயினவேயன்றி, தனித்தனியே படைக்கப் பெறவில்லை என்பது ஆய்வாளர் உரை.

குதிரை இன வரலாறு: கூர்தலற ஆய்விலேயே குதிரை இனத்திற்குத் தனிச் சிறப்பு உள்ளது. ஏனெனில் குதிரை இனத்தின் புதையுயிர்த்தடங்களே மற்றவற்றைவிட மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன. இப் புதையுயிர்த்தடங்கள் குதிரை இனம் ஐந்துகோடி ஆண்டுகளுக்கு முன் மிகவும் சிறிய விலங்கிலிருந்து கூர்தலற வளர்ச்சி பெற்றதென்றும் ஒன்பது நிலைகளைக் கடந்து இன்றைய நிலையை அடைந்திருக்கிறது என்றும் ஐயமற மெய்ப்பிக்கின்றன. குதிரை முதன் முதலில் பூனையின் உயரத்தோடும் குளம்புகளற்ற விரைவாக ஓடமுடியாத மெல்லிய கால்களோடும் புல்லைத்தின்ன வியலாத பற்களோடும் இருந்தது. சூழ்நிலையின் காரணமாக அதன் உருவம் மெல்ல மெல்ல பெரிதாயிற்று. விரல்களின் எண்ணிக்கைக் குறைந்தது; கால்கள் நீண்டன; நகங்கள் மறைந்து குளம்புகள் ஏற்பட்டன. பற்கள் புல்லைத்தின்ன ஏற்றவாறு மாறின. படிப்படியாக இம் மாறுதல்கள் ஏற்பட்டுக் குதிரை இன்றைய நிலையை அடைந்துள்ளது.

திடீர்மாற்றம் (MUTATION): ஓரினத்தின் கூர்தலறப் பாதையில் சில சமங்களில் திடீரெனச் சில வேறுபாடுகள் தோன்றுகின்றன. கொம்புள்ள மாட்டு இனத்தில் கொம்பே இல்லாத ஒரு கன்று தோன்றிப் பின்னர் அஃது ஒரு நிலைத்த வேறுபாடாக அமைந்து, அதன்

www.thamizham.net - Free E book No 7424

மூலம் கொம்பற்ற ஒரு புதிய இனம் தோன்றி விடுகிறது. இப்படித் தோன்றும் வேறுபாடு திடீர்மாற்றம் (Mutation) எனப்படும். இத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று தெளிவாகத் தெரிய வில்லை. ஆனால் இயற்கையில் பல இனங்கள் திடீர் மாற்றத்தின லேயே உண்டாகி யிருக்கின்றன என்பது நமக்குத் தெரிகின்றது.

இயற்கைத் தேர்வு (Natural Selection): இனப்பெருக்கத்தால் உயிர்களின் எண்ணிக்கை மிகுதியாகின்றது. ஆனால் உணவும் உறைவிடமும் பிற தேவைப் பொருள்களும் ஒரே அளவினதாக இருப்பதால் அவ்வின உயிர்களிடையே இயல்பாகவே கடும் போட்டி எழுகிறது. இவ் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடையும் உயிர்கள் தொடர்ந்து வாழ்ந்து இனப்பெருக்கம் அடைகின்றன. இயலாதவை இறந்து அழிகின்றன. தனக்குத் தகுதி உண்டு என மெய்ப்பிக்கும் உயிர்களையே இயற்கை தொடர்ந்து வாழத் தேர்ந்தெடுக்கின்றது. இதை "இயற்கைத் தேர்வு" (Natural Selection) என்று தார்வின் குறிப்பிடுகின்றார்.

மாந்தனின் கூர்தலறம்: மாந்தன் பாலூட்டி வகுப்பைச்சேர்ந்த ஒரு விலங்கு. மற்ற இனங்களைப் போன்றே சூழ்நிலை நெருக்கத்தினால் புதிய உருவம் பெற்ற ஓரினத்தைச் சார்ந்தவன். குரங்குகளைப்போன்ற முன்னோர்களினின்றும் காலப்போக்கில் கூர்தலற வளர்ச்சியால் மாந்த இனம் தோன்றிற்று என்பது நிலவியல் ஆய்வுகளால் மெய்ப்பிக்கப் பட்டதோர் உண்மையாகும். குதிரையின் கூர்தலறத்தைப் போலப் படிப்படியாக மெய்ப்பிக்கும் அளவிற்குப் புதையுயிர்த்தடங்கள் இல்லை யென்றாலும் மாந்த இனக் கூர்தற வரலாற்றுக்கு அடிப்படையாகப் பல புதையுயிர்த்தடங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன கிடைத் துள்ள புதையுயிர்த்தடங்கள் மாந்த இனத்தின் தோற்றத்தையும் கூர் தலறப் போக்கையும் தெளிவுபடுத்துகின்றன.

இன்றைய மாந்த இனம் ஏறத்தாழப் பத்திலக்கம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒருவகைக் குரங்கு இனத்தினின்றும் கூர்தலறவளர்ச்சி பெற்றதாகும். முன் காலத்தில் வாழ்ந்த வேறுபல மாந்த இனங்கள் இறந்து ஒழியவும் எஞ்சி நின்றதே இன்றைய மாந்த இனம். இன் றைய மாந்தக் குரங்குகளைப் போன்ற தோற்றமும் மரங்களில் கிளைக் குக்கிளை தாண்டிக்குதித்துச் சென்று பழம் காய்கள் முதலியவற்றைத் தின்று வாழ்தலும் இவ்வினத்தின் சிறப்பியல்புகள். குளிர் வெப்ப

www.thamizham.net - Free E book No 7424

நிலைகள் உணவு முதலிய சூழ்நிலைகளில் மாறுதல் இல்லாமலிருந் திருப்பின் மாந்த இனம் தோன்றியே இருக்காது என்பதில் ஐயமில்லை.

மாந்தக் குரங்குகள் மரத்தில் வாழும் விலங்கினத்தைச் சேர்ந் தவை. உகிருடைய விரல்களை உடையவை. உள்ளங்காலைத் தரையில் பதியவைத்து நடப்பவை. உடலெங்கும் முடியும் வளர்ச்சி பெற்ற மூளையும் உடையவை; இக் குரங்கினத்தில் ஐந்தாவது குடும்பத்தைச் சேர்ந்ததே மாந்த இனம் என்கின்றனர். மாந்தனை மற்ற இனங்களி லிருந்து பிரிக்கும் மாறுபாடுகள் அவன் நிமிர்ந்த நடையும், மற்ற விரல்களுக்கு எதிராகக் கையின் கட்டைவிரலைப் பயன்படுத்தும் ஆற் றலும், உடலில் மிகுதியாக மயிர் இல்லாமையும், பகுத்தறிவு அல் லது எண்ணும் ஆற்றலும், பேச்சாற்றலும் பிறவுமாகும்.

மாந்தனையும் 'கிப்பன்' குரங்கையும் தவிர உலகில் வேறு எவ் விலங்கும் தன் பின்னங்கால்களை மட்டுமே பயன்படுத்தி நேராக நிமிர்ந்து நடப்பதில்லை. இதனாலேயே முகம் தரையை நோக்கி இல் லாமல் முன்னோக்கி அமைந்துள்ளது. மேலும், முதுகு, இடுப்பு, கால் எலும்புகள் முதலானவற்றின் அமைப்பிலும் இணைப்பிலும் பிறவற்றி லும் இதனால் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

மற்ற விரல்களுக்கு எதிராகக் கையின் கட்டைவிரலைப் பயன் படுத்தும் ஆற்றல் மாந்தனுக்கும் ஓரளவு பெரிய குரங்குகளுக்குமே உண்டு. மாந்தனிடம் மட்டுமே இவ்வாற்றல் முழுவளர்ச்சி அடைந் துள்ளது. இவ்வாற்றல் மட்டும் இல்லாதிருந்திருந்தால் மாந்த இனத் தின் முன்னேற்றம் தடைப்பட்டிருக்கும். மாந்தனுக்கு மார்பிலும் முது கிலும் ஓரளவு மயிர் காணப்பட்ட போதிலும் குரங்குகளைப் போலப் போர்வையாக இல்லை. மேலும், மாந்தனின் கண்கள் முன்னோக்கி ஒன் றுக்கொன்று அருகில் அமைந்திருப்பதனால் மாந்த இனத்தின் முக அமைப்பிற்கும் மற்ற இன முக அமைப்பிற்கும் நிறைய வேற்றுமை காணப்படுகின்றது.

எல்லாவற்றையும்விடத் தனிச்சிறப்பான இரு வேறுபாடுகள் மாந்தனின் எண்ண ஆற்றலும் பேச்சாற்றலும் ஆகும். பகுத்தறிவு அல்லது எண்ணும் ஆற்றலுக்குக் காரணம் மூளையின் ஒரு பாகத் தின் (Neopaleum) இயக்கம் என்பது தெரிந்திருப்பினும் எண் ணங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பது இதுவரையிலும் தெளி வாக்கப்பட வில்லை. மாந்தக் குரங்குகளும் பிற விலங்குகளும் தம் உணர்ச்சிகளை வெளியிடப் பல்வேறு ஒலிகளை உண்டாக்குகின்றன

www.thamizham.net - Free E book No 7424

வெனினும், தம் எண்ணங்களைக் கோவையாகப் பிறருக்குப் புரியும்படி தெரிவிக்கும் பேச்சாற்றல் மாந்தன் மட்டுமே பெற்றுள்ள சிறப்பாற்றலாகும்.

மாந்தனின் புதையுயிர்த்தடங்களில் மிகப் பழைமையானவை என்று நம்பப்படுபவை பர். உயூகின் தூபாய் என்னும் 'டச்சுக்கார'ரால் 1891-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட தலைஓடு, மேல் கடைவாய்ப் பற்கள், இடக்கால் எலும்பு ஆகியவையே. இவற்றில், மண்டை ஓடு மாந்த இனத்தினுடையதைப்போல் இருந்தது. தாடை மாந்தக் குரங்கினத்தை ஒத்திருந்தது. எனினும் பல ஆய்வுகளுக்குப்பின் இவை மாந்த இனத்தின் புதையுயிர்த்தடங்களே என அறிஞர்கள் தீர்மானித்தனர் இவ்வினத்திற்கு சாவக 'Java' மாந்தன் என்று பெயரிட்டனர். ஏறத்தாழ ஐந்து இலக்கம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த இம்மாந்தன் 5 அடி 7 விரற்கடை உயரமும் நல்ல உடற்கட்டும் நிமிர்ந்த நடையும் சிறிய சரிந்த நெற்றியும் அகன்ற சப்பையான மூக்கும், தாடையும், பற்களும் உடையவனும் முகவாயின்றியும் இருந்தான்.

எதிர்காலக் கூர்தலற வளர்ச்சி: உலகில் இன்றுள்ள உயிரினங்கள் எல்லாம் எதிர்காலத்தில் மேலும் எப்படி கூர்தலற வளர்ச்சி பெறும் என்று அறிதல் எளிதன்று. ஏனெனில் ஒருகோடி ஆண்டுகளுக்குப் பின் சூழ்நிலை எப்படி இருக்கும் என்று முடிவுசெய்வது எளிய செயலன்று. உலகின் வருங்காலப் போக்கை அறிய அதன் தளத்தில் உள்ள எல்லாப் பொருள்களின் சரியான அளவையும், அவற்றின் பரந்த தன்மையையும், வலிமையையும், அமுக்கும் ஆற்றலையும் அடித்தளத்தின் வலுக்குறைந்த இடங்களையும் நிலவியல் வல்லார் திரட்டித் தந்தாலும் அவற்றை ஒருங்கே கூட்டிக் கணக்கிட்டு விடைகாணப் பல நூற்றாண்டுகளாகும். மேலும் சூழ்நிலை எப்படி எப்படியெல்லாம் மாறும் என்பது தெரிந்தாலும், அம்மாறுதல்களால் உயிரினங்களில் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும் என்று திட்டவட்டமாகச் சொல்ல வியலாது.

மாந்தனின் கூர்தலறம் இனி அவன் மனத்தைப் பொறுத்ததே என்று சிலர் கருதினாலும் ஒரு சாரார் உருவும் உடலும் மேலும் மாறுதல்களை அடையுமெனா நம்புகின்றனர். அர்டுலிக்கா என்னும் அறிஞர் "வருங்கால மாந்த இனத்தின் மூளை அமைப்பிலும் செயலாற்றும் திறனிலும் மிகுந்த முன்னேற்றம் இருக்கும். மூளை, அளவில் மிகுதி

www.thamizham.net - Free E book No 7424

யாகாது; தலை ஓடு இன்றுள்ளதைவிட வட்டமாகவும், தலை ஓட்டின் எலும்புகள் மெல்லியதாகவும் இருக்கும். தாடைகள் சிறியன வாகும். உடலில் உள்ள மயிர் குறையும். முகம் மிகுந்த அழகுள்ளதாக இருக்கும். உயரம் மிகும். உடல் மெலிந்து நெற்றி அகன்று இருக்கும். இன்னும் ஆழப்பதிந்த நீண்ட கண்களும், குறுகிய எடுப்பான மூக்கும், சிறிய வாயும், சிறு பற்களும் காணப்படும். முகவாய் மேலும் வளர்ச்சியடையும். கால்களின் நீளம் மிகும். கைகளின் நீளம் குறையும். கால்களின் கடைசி விரல் சிறிதாகிப் பின் மறையும். உடலினுள் சிறுகுடலின் நீளம் குறையும். உடல் வெப்பம் மிகும். நோயை எதிர்க்கும் ஆற்றல் குறையும். தோல்நோய்கள், சருக்கரைநோய், பற்கள் தொடர்பான நோய், புற்று, கண், காது நோய்களும் நெஞ்சுநோய்களும் மிகும்''—என்கிறார். ஆனால், ஆண்டுரு என்னும் அறிஞர் ''மாந்தனின் மூளை வளர வளரத் தலை மிகவும் பெரிதாகிவிடும். முகமும் மற்றைய உடல் உறுப்புகளும் சிறியனவாகிவிடும். பற்களும் மயிரும் மறைந்துவிடும்'' என்கிறார். பாய்டு என்னும் அறிஞர் மக்கள் தொகை விளக்கங்களை ஆய்ந்து: இன்று ஆப்பிரிக்கா, ஆசியா, தென் மைய அமெரிக்காவில் வாழும் மக்களின் பிறங்கடையினர் வருங்கால உலகில் செழித்து வாழ்வார்கள் என்றும் ஐரோப்பிய, வட அமெரிக்க மக்கள் மிகுதியாக இருக்கமாட்டார்கள் என்றும் கருத்தறிவிக்கிறார்.

முடிவுரை: மாந்தனின் இன்றைய அறிவியல் நிலையை வைத்துப் பார்த்தால் சூழ்நிலை நெருக்கடிகள் மாந்த இனக் கூர்தலறத்தில் விளைவுகளை ஏற்படுத்த முடியாது என்பது நன்றாகத் தெரிகிறது. மாந்தன், இன்று தன் விளங்கியல் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்ட விலங்கல்லன். இயற்கை ஆற்றல்களை எல்லாம அடக்கித் தனக்குப் பயன் படுத்திக்கொள்ளத் தெரிந்து கொண்டு இருக்கின்றான். பனியும் மழையும், வெயிலும், புயலும் அவனை எதுவும் செய்ய வியலாது. அவன் அறிவியல் வெற்றிகள் அவனைக் காக்கின்றன. சூழ்நிலையைக் கட்டுப் படுத்த முடியுமென்பதால் மாந்தனின் வருங்காலப் போக்கு அவன் கைகளிலேயே இருக்கின்றது எனலாம். O

## ஓர் அறிக்கை.

'தென்மொழி' அமைச்சர் திரு. கு. ஐந்தெழுத்தன் அவர்கள் 20—8—70-அன்றிலிருந்து தம் பொறுப்பினின்று விடுவிக்கப்பெற்றார். எனவே இனி தென்மொழி, தமிழ்ச்சிட்டு அன்பர்கள் அவர் வழியின்றி, அலுவலகத்துடன் நேரடியாகவே தொடர்புகொள்ள அறிவிக்கிறோம்.

மேலாளர். தென்மொழி.

www.thamizham.net - Free E book No 7424

முன்னிதழ்த் தொடர்ச்சி:

# சேனாவரையர் உரைத்திறன்

பேராசிரியர். க. ப. அறவாணன், க. மு; கீ. க. தே.

## 1. தொல்காப்பிய நெறிகாட்டி மறுத்தல்:

"தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே"—

என்ற நூற்பாவிற்கு உரையாசிரியர் குழூஉக் குறிநிலை வழக்குகளையும் இடக்கரடக்கலையும், மரூஉ முடிபுகளையும், எடுத்துக் காட்டினார். அதனைச் சேனாவரையர் இரண்டு நெறிகளில் மறுத்துரைக்கிறார்.

1. குழூஉவின் வந்த குறிநிலை வழக்கு-சான்றோர் வழக்கின் கண்ணும், செய்யுட்கண்ணும் வரவில்லை.

2. இடக்கரடக்கலையும், மரூஉ முடிபுகளையும் தொல்காப்பியர் 'அவையல்கிளவி' (சொல்-442), 'மறைக்குங்காலை' (443) என்றும் 'மரீஇயது ஒரால்' என மரூஉ முடிபை எழுத்ததிகாரத்தும் கூறியுள்ளார். ஆதலின், உரையாசிரியர் கருத்து(ச்சரி) அன்று என்று மறுக்கிறார். [பிற இடங்கள் நூ: 1; 13]

## 2. இலக்கிய வழக்காறு கொண்டு மறுத்தல்:

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'-என்ற தொடரில் உள்ள 'என்மனார்' என்ற சொல்பற்றிய சொல்லாராய்ச்சியில் இருவர்க்கும் கருத்து வேறுபாடு.

இளம்பூரணர் முறை:

என்ப—பகரங்கெட்டு 'என்' ஆயது.
— மன்சேர்ந்து 'என்மன்'—
— ஆர் சேர்ந்து ,என்மனார்-என ஆயிற்று

என்பது செய்யுள் விகாரம் என்பது கருத்து. இதனைச் சேனாவரையர் மறுக்கும் போது,

செய்யுள் விகாரம் இலக்கியத்துள் (1) தவிர்க்க முடியாத இடத்து வருவது; (2) சிறுபான்மையாக வருவது. ஆனால் 'என்மனார்' என்ற சொல் சான்றோர் செய்யுட்களில் (1) இடர்ப்படாத இடத்தும் வருகின்றது (2) பெரும்பான்மையாகவும் வருகின்றது என்பதாலும்.

இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார். பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மலைவு ஆதலானும்

www.thamizham.net - Free E book No 7424

உரையாசிரியர்க்கு அது கருத்தன்று என்க என மறுப்புரைக்கின்றார். ஈண்டுக் கருதவேண்டியது 'என்மனார்' என்பதன் சொற்பயிற்சி இலக்கியத்துள் எவ்வாறு வந்துள்ளது எனச் சேனாவரையர் பார்த்து-உரையாசிரியரை மறுத்துள்ளார் என்பதே யாகும். இது போன்ற பிற இடங்கள்—நூ:17.

### 3. அவர் உரையைக் கொண்டே மறுத்தல்:

எதிரியின் கருத்தை எதிரியின் சொல்கொண்டே மறுத்தல்—தருக்க அரங்கில் சுவையான ஒன்று. சேனாவரையரும்—அவ்வாறு தருக்கம் நிகழ்த்தியுள்ளார்.

*'ஆயிரு திணையின்'* இசைக்குமன சொல்லே—(சொல்.) என்ற தொடரில் 'ஆயிரு திணையின்' என்பதை 'ஆயிரு திணையினையும்' என இரண்டாம் வேற்றுமையாக விரித்தார் உரையாசிரியர். உருபு வெளிப்பட்டு நிற்காமல் சாரியை மட்டும் வெளிப்பட்டு நிற்றல்—இரண்டாம் வேற்றுமைக்கு இல்லை என்பது,

*சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்*
*சாரியை உள்வழி தன்னுரு நிலையலும்*—(எழுத்து. 157)

என்ற தொல்காப்பிய நூற்பாவால் பெறப்படுகின்றது என்று தொல்காப்பிய நூற்பாவைக் கொண்டு மறுத்த சேனாவரையர், அடுத்தபடியாக—

இதேபோன்று சாரியை வெளிப்பட்டு நிற்கும் வேறு சொற்களுக்கு இளம்பூரணர் இரண்டாம் வேற்றுமையாக விரிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

செலவினும் வரவினும்—(28) என்ற இடத்துச் செலவின் கண்ணும், வரவின்கண்ணும் என்று ஏழன் உருபே விரித்துள்ளார் உரையாசிரியர். அங்கு ஏழாம் வேற்றுமையாய் விரித்தமை போன்றே ஈண்டும் ஏழாம் வேற்றுமையாய் விரிக்கவேண்டும் என—உரையாசிரியரின் உரை அவரது உண்மையான உரையன்று போலிஉரை எனக் கூறுகிறார்.

### 4. தம் தருக்கத்திறமையால் மறுத்தல்:

"செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்"—என்ற நூற்பாவில் சேனாவரையர் "வினய பொருளை அறிவுறுப்பது செப்பு" என்ற அடிப்படையில் 1. செவ்வன் இறை, 2. இறைபயப்பது எனச் செப்பு இருவகை

www.thamizham.net - Free E book No 7424

என்றுரைத்தார். உரையாசிரியர், 1. வினா எதிர்வினுதல், ஏவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் எனச் செப்பு அறுவகைப்படும் என்ருர். அதற்குச் சேனுவரையர். உயிர் எத் தன்மைத்து என்ற வழி உணர்தல் தன்மைத்து என்றல் முதலாயின அவற்றுளடங்காமையானும், மறுத்தலும் உடன்படலும் வினுவப்பட் டார்க்கணன்றி, ஏவப்பட்டார் கண்ணவாகலானும், உரையாசிரியர் கருத்து அவர் கருத்தன்று என்று மறுத்துரைக்கிருர்.

பிற இடங்கள்: 51, 60, 401.

5. மறுப்புக்குச் சேனுவரையர் கொண்ட நெறிகள்:

சேனுவரையர்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்ட முதனூல்"—

மேல் ஆழ்ந்த நிறைந்த மதிப்புடையர் என்பதில் கடுகளவும் ஐய மில்லை. அதே நேரத்தில்—அவர் உரையாசிரியர் மீதும் உரிய மதிப்பு வைத்திருந்தார் என்பது அவர் மறுப்புரைகளின் போக்கால் புலனு கின்றது. முதல் உரைகாரரும், அதனுலேயே உரையாசிரியர் என எல்லாராலும் அழைக்கப்பட்டவருமான தொன்மை உரைகாரரை மறுக்கும்போது தருக்கத்தில் நிறைந்த அழுத்தமும், தெளிவும் காட்டி மறுத்துள்ளார் சேனுவரையர். அத்துடன் தாம் மறுக்கின்ற மறுப்புகள் எல்லாம் உரையாசிரியர் உரைகளை அல்ல; அவர் பெய ரில் உலவும் போலி உரைகளையும், பொருந்தாக் கருத்துகளையுமே எனத் தெளிவுபடுத்துகிருர்.

உரையாசிரியர் பெயரில் உலவுகின்ற உரை அவரது உண்மை யான உரையன்று; அஃது அவர் உரைபோன்ற உரையே என்ற கருத் துப்பட 'போலிஉரை' என்னும், இடங்களான: 1, 5; 13, 24 33, 35, 40, 51, 54, 60, 401, 427, 428, 448, 65, 73, 114, 174; 187, 593

இவை உரையாசிரியரின் கருத்து என உலவுவன எல்லாம் உரை யாசிரியர்க்கு உரிய கருத்துகள் அல்ல என்ற கருத்துப்பட 'அவர் கருத்து அன்று என்க' என்னும், இடங்கள்: 4, 17, 29, 33, 45, 50, 55, 408, 415, (416). 422, 426, 431, 441, 450, 457, 460, 1, 26, 62, 67, 82, (83), 102, 104, 114, 115, 120, 161, 182, 272, 288, 291, 294.

www.thamizham.net - Free E book No 7424

இத்தகு தவறுபட்ட கருத்தை உரையாசிரியர் தம் சொந்தக் கருத்து வளத்தால் கூறி இரார்; பிறர் உரையை எடுத்துக் காட்டியிருப்பாரே அன்றி அவர் தவறு செய்யார் என்ற கருத்துத் தோன்றும்படியாக,

'பிறர் மதமேற் கொண்டு அறியாது கூறினுர்' என்னும், இடங்கள்: 13, 26, 17-இவ்வாறு சேனுவரையர் மறுக்கின்ற நெறிகள் பண்பொடு பட்டுள்ளன.

6. தான் வினுவித் தான் மறுத்தல்: நூலுக்கு உரையியற்றும் போது உரைகாரர் எழுகின்ற ஐயங்களைத்தானே எழுப்பி அதற்கு விடையிறுக்கும் முகமாக விளக்கமளித்தல் ஒருவகை முறை. இம்முறை வடநூன்முறை என்றும் பரிமேலழகர் உரையிலும் காலிங்கர் உரையிலும் பின்பற்றப்பட்டுள்ளது என்றும் உரைப்பர். அதுபோன்று சேனுவரையர் தாமே தடை எழுப்பி விடை இறுக்கும் இடங்கள் உள்ளன. நூற்பா-7, 416, 412-இல் ''மார் எதிர்காலம் பற்றிவந்த ஆரேயாம்; ரஃகான் ஒற்று என அடங்கும் எனின், அற்றன்று, ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம் பற்றி வந்ததோர் எழுத்தாகல் வேண்டும். உண்பார் வருவார் எனக் காலம் பற்றி வரும் எழுத்து முதனிலைக்கேற்ற வாற்ருன் வேறுபட்டு வருமன்றே; அவ்வாறன்றி உண்மார் வருமார் என எல்லா முதனிலை மேலும் மகரத்தோடு கூடி வருதலானும் வினைகொண்டு முடிதற்கேற்பதோர் பொருள் வேறுபாடுடைமையானும் ஆர் ஈறு அன்று வேறெனவே படும் என்பது'' என உரைத்தல் காண்க. இதுபோன்று 'அற்றன்று' என்ற வாய்பாட்டினைச் சேனுவரையர் நிரம்பக் கையாளுகிருர். [நூ-61, 416, 155, 182]

அன்றியும் 'கடா அன்மை உணர்க' (நூ-2), என்றும் 'வழுவன்று' (நூ-17) என்றும் உரைப்பதுண்டு.

IV சேனுவரையரின் வடமொழி அறிவு: ஒரு மொழியின் தொன்மையையும் மென்மையையும் அதன் நாடி நரம்பையும் அறியப் பிறமொழி அறிவு என்றும் தேவை போலும். மாந்தனின் மனம் எதையும் ஒப்பிட்டுப் பார்த்துப் போற்றவும், தூற்றவும் கூடியது. அதுவும் தன் காலத்தில் உயர்வாகக் கருதப்பட்ட ஒன்ருேடு தன்னோடு நெருக்கத் தொடர்புகொண்ட பொருளையோ, மொழியையோ உரசிப்பார்ப்பது அறிஞர் மனத்தின் இயற்கைப்பண்பு. ஆதலின் சேனுவரையரும் தம் காலத்திருந்த வடமொழியின் நூற்கடல் கண்

www.thamizham.net - Free E book No 7424

டுணர்ந்தே தமிழ்நூற்கடலுள் அறிவு நீச்சு இட்டார் போலும். அத ஞற்ருன் அவருரையில் ஆங்காங்கே வடமொழி எண்ணங்கள் இழை யோடுகின்றன.

1. சொற்கள் இரண்டு வகைப்படும்: தனிமொழியும் தொடர் மொழியும் என. அவற்றுள் தனிமொழியாவது சமய ஆற்றலால் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது அவாய்நிலையானும், தகுதியானும், அண்மைநிலையானும். இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம் என முதல் நூற்பா விளக்கத்தில் உரைப்பர். இவ் விளக்கத்துள் வந்துள்ள சமய ஆற்றல் என்பது வடமொழி சங்கேத ருபாசக்தி என்பதையும் அவாய்நிலை, தகுதி, அண்மைநிலை என்பன ஆகாங்ஷா, யோக்யதா, சந்நிதி என்பனவற்றையும் தழுவியன என் பர்.

2. இருதிணை மருங்கின்.......10. என்ற நூற்பாவில் அநுவா தம் (பெயர்த்துரை) ஞாபகம் (நினைவுறுத்தல்) என்பன. இரண்டும் வடமொழிச் சொற்களாக இருத்தலின் அவற்றைச் சேஞவரையர் வட மொழியினின்று எடுத்துணர்த்தியுள்ளார் என உய்த்துணர வாய்ப் புள்ளது.

3. 'மயங்கல் கூடா தம்மரபினவே:-11 என்பதற்கு இருவழி களாகப் பொருள் கொள்ளும் முறைக்கு 'யோகவிமாகம்' எனக் குறிப் பிடுகிருர். அதுவும் வடமொழித் தொடரே.

4. 'செப்பு' பற்றி (13) விளக்குகையில் 'அறிவுறுத்துவது செப்பு' எனக் கூறுவதை மறுத்து 'விஞய பொருளை அறிவுறுப்பது செப்பு' என்றலே சரி என தருக்கமிட்டு அத்துடன் உத்தரம் (என்ற வட சொல்லோடு) ஒரு பொருட்கிளவியும் அதுவே என்றுரைக்கி ருர். இதனின்று சேஞவரையரின் விளக்கங்கட்கும், வரையறைகட் கும் வடமொழி அறிவும் துணை நின்றது என்பதுணரப்படும்.

5. 'குறித்தோன் கூற்றம் தெளித்து மொழி கிளவி' (55) என்ற நூற்பா விரிவுரையில் வடநூலார் இதனை நேயம் என்ப என்று சுட் டிக்காட்டுகிருர். இதனுல் அவரது வடநூல் அறிவு புலனுகிறது.

6. காலம் உலகம்......... (57) என்ற நூற்பாவில் உலகம் என்ற சொல் வடநூற்சொல் எனக் குறிப்பிடுகிருர். (பிற்கால மொழி நூலாய்வாளர் இது தமிழ்ச் சொல்லே என உறுதிப்படுத்துவர்.)

www.thamizham.net - Free E book No 7424

இதனின்று, சேனுவரையர் வடநூல் உணர்ந்தவர் என நாம் கருதலாம்.

வடமொழிப்பற்று: 401, தாது 415; பிரியாத்தொகை 416 ஆகிய நூற்பா உரைகளும் சான்றாக நிற்கின்றன.

V சேனுவரையரின் இலக்கியப் புலமை: பண்டை ஆசிரியர்களுக்கு இலக்கணமும், இலக்கியமும் இரு விழிகளைப்போல. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை அல்ல; ஒன்றுக்கு ஒன்று துணை. இலக்கணத்தை உணர இலக்கிய அறிவும், இலக்கியத்தை உணர இலக்கண அறிவும் தேவைப்பட்டன. இரண்டையும் ஒத்துப்பார்த்து ஒருங்கு கற்ற நெறி நாளடைவில் தேய்ந்து இன்று இலக்கணக்கல்வியும, இலக்கியக்கல்வியும் இரு கோளமுனைகளாகப் பிரிக்கப்பட்டு விட்டன. மொழித்தாய்க்குப் பிறந்த அவ்விரண்டு குழந்தைகளும்–இன்று வேறு பிரிந்து விட்டாலும் அவை இரண்டும் ஒன்றிலிருந்து தோன்றியவை; ஒன்ருலே வளர்ந்தவை என்பது மொழி வரலாற்றுண்மை.

உரைகாரர்கள் இலக்கிய இலக்கண முதன்மையை உணர்ந்திருந்தார்கள். இலக்கணத்தை எடுத்து இலக்கிய உரைகல்லில் தேய்த்துப் பார்ப்பதும் இலக்கியத்தை எடுத்து இலக்கண உரைகல்லில் தேய்த்துப் பார்ப்பதும், அவர்களுக்கு விருப்பமான பணியாக இருந்தது. இது தொடர்பாக நச்சினார்க்கினியருக்கு ஒரு தனியிடம் உண்டு. மற்ற உரைகாரர்களைக் காட்டிலும் கூடுதலாக இலக்கியங்களில் தோய்ந்து இலக்கணத்தை ஆய்ந்தவர். சேனுவரையரும் அவரோடு ஒத்து வைத்துப்பார்க்க இயலாவிட்டாலும்-சேனுவரையரின் இலக்கியப்புலமையை நாம் மறுக்க முடியாது. நூ: 22, 26, 29, 33, 37, 34, 45, 47, 51, 55.

'புறத்தைப் புறத்தொகை என்றழைப்பர்'—233 என்னும் நூற்பாவிற்குப் புறநானூறு, களவழி நாற்பது, குறுந்தொகை (457) அகநானூறு (457), பத்துப்பாட்டு (462) திருக்குறள், சிலப்பதிகாரம் (82) ஆசாரக்கோவை, அகத்தியம்-(74, 463) பதிற்றுப்பத்து-(234) ஆகிய நூற்களினின்று அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவருடைய செறிந்த மொழிநடையும் அவருக்கிருக்கும் தோய்ந்த இலக்கிய அறிவை உறுதிப்படுத்துகின்றது. (முற்றும்)

www.thamizham.net - Free E book No 7424

# மூலிகை மணி

(உயரிய மருத்துவத் திங்களிதழ்)

ஆசிரியர்: வேலூர் மருத்துவர்,

## திரு ஆ. இரா. கண்ணப்பர்.

மாந்தர் வாழ்வின் வளத்தைக் குறைக்கும் கொடிய நோய்களைப் பற்றியும், அவற்றைத் தமிழ் (சித்த) மருத்துவ முறையில் தீர்க்கும் வகைகளைப் பற்றியும் விளக்கும் சிறந்த இதழ். மருத்துவத்துறை மட்டுமேயன்றி, பலதுறை பற்றிய பயனுடைய கட்டுரைகளையும் கொண்டது.

ஆண்டுக் கட்டணம்: உரு. 6—00

அரையாண்டுக் கட்டணம்: உரு. 3—00

தனியிதழ் விலை 50 காசு.

முகவரி:

ஆசிரியர், "மூலிகைமணி"
(அ. பெ. எண்: 126)
59, மாசிலாமணி முதலி தெரு,
வேலூர்-1. (த. ஆ.)

---

மருத்துவத் துறையில் அரிய முயற்சி!

# "முதல் சித்தன்"

(உடல் நலத் திங்கள் ஏடு)

பதிப்பாசிரியர்:

## திரு. பண்டித. முத்துக்கருப்பப் பிள்ளை.

கடந்த நான்காண்டுகளாகத் தமிழ் மருத்துவச் சிறப்பினை அனைவர்க்கும் உணர்த்தும் வகையில் பெரும்பணி புரிந்து வருகிறது. மருத்துவம், கணியம், சமயம், குழுகாயம், அறிவியல் பற்றிய பல அரிய கட்டுரைகளையும் அரசினரால் அவ்வப்போது வெளியிடப் பெறும் மருத்துவச் சார்பான சட்டதிட்டங்களையும் தாங்கி வெளிவரும் உயரிய தமிழ்த் தாளிகையாகும்.

நல்வாழ்வை விரும்பும் அனைவரும் வாங்கிப் பயன்பெறத்தக்க சிறந்த கருவூலம். உடனே உறுப்பினர் ஆகுங்கள்.

தனிப்படி 50 காசு. ஆண்டுக்கட்டணம் உரு. 5-00

தொடர்புகொள்க:— ஆசிரியர் "முதல் சித்தன்"
36, காசிமார் தெரு,
மதுரை-1. (தெ. இ.)

(விளம்பரப் பக்கம்.)


www.thamizham.net - Free E book No 7424

0 205: பெருமதிப்புள்ள பாவலர் அவர்களே,

வணக்கம். உங்கள் இதழ் (மேழம் தி. பி. உ00௧. ஏப்பிரல், மே. 1070) 'யாருக்கும் வெட்கமில்லை' என்ற ஆசிரியவுரை படித்தேன். மிகமிக அருமை. மிகவும் உணர்ச்சி முழுமையாக இருந்தது. தி. மு. க. அமைச்சர்கள் போடும் போலித் தமிழ்ப்புனைவை அருமையாக எழுதி யிருக்கிறீர்கள். அரசுக் கட்டிலில் அதிகாரம், கட்சி ஆட்கள், காவல் படைகளுடன் கோலோச்சும் அமைச்சரின் குறையை மிகமிகத் துணிவுடன் எழுதியது குறித்து மெத்த மகிழ்கிறேன். கழகக் காலத்தில் உங்களைப் போன்ற புலவர்கள் பலர் அரசர்களைக் கண்டித்து இடித்துரைத்தது போல நீங்களும் கண்டிப்பது கண்டு கழிபேருவகை அடைகிறேன்.

தமிழக அமைச்சர்கள் நாற்காலியைப் பிடிப்பதற்காக தி. மு. க. ஆட்கள் 'தமிழ் வாழ்க' கூச்சலிட்டதைத் தமிழர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல எடுத்து இயம்பியுள்ளீர்கள். மகிழ்ச்சி, மிக்க மகிழ்ச்சி. மேலும், பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின்னர் புரட்சிப் பாவலராயும் தனித்தமிழ்ப் புலவராகவும் பாவேந்தராகவும் நீங்கள் திகழுகிறீர்கள். உங்களைப்புகழ்வதாக நினைக்காதீர்கள். மெய்யாகவே உங்கள் ஆற்றல் என்போன்ற மெய்யான பகுத்தறிவு, பொதுமை, தமிழுணர்வுள்ள இளைஞர்களைக் காந்தம் போலக் கவர்ந்திழுக்கிறது. உங்கள் ஆசிரியவுரைக்காகவே நான் தென்மொழி படிக்கத் துடிக்கிறேன். உங்களைப் பாரீசு மாநாட்டுக்கு அனுப்பியிருந்தால் எத்துணைச் சிறப்பாகஇருக்கும்? பார்ப்பன அடிமைகளாகிவிட்ட அமைச்சர்களுக்கு உங்களிடம் உள்ள புலமை எப்படித் தெரியப்போகிறது? தேவநேயர் மாபெரும் புலமைக்கடல். அவர்களை அமைச்சர்கள் புறக்கணித்தது—புறக்கணிப்பது மிகமிகக் கீழ்மைத்தனமாகும். கருத்திருமனுக்கும், ம. பொ. சி. க்கும் தெரிந்த தமிழை, நமது பாவாணர்க்குத் தெரிந்த தமிழுடன் ஒப்பிட்டால் யாருடைய தமிழ்ப்பணி சிறந்தது என்று பொதுவான எனக்கே புரிகிறது. மிகப்பெரும் பதவியில் உள்ள மு. க. விற்கு இது புரியாதா? இன்னும் தமிழர்களுக்குத் தி. மு. க. வினர் புரியும் தமிழ்க்கேடுகளை மனம் திறந்து துணிவோடு எழுதுங்கள். தமிழர்கள் -உண்மையான மானமுள்ள தமிழர்கள் உங்களைப் பாராட்டுவார்கள். உயிரையும் தருவார்கள். ஒன்றுமட்டும் உண்மை; உறுதி. எதிர்காலத்தில் உங்கள் தமிழிலக்கியப் படைப்புகள் மிகமிக உயர்ந்த பெருமை அடையும். உயர்நிலைப் பள்ளிக்கூட நூல்களிலும், கல்லூரி நூல்களிலும், தொடக்கப்பள்ளி நூல்களிலும் உங்கள் பாக்கள் பாடமாக வரத்தாம் போகின்றன. தமிழ்ச்சிட்டு வழியாகக் குழந்தைகளுக்கு நற்றமிழ் தருகிறீர்கள். உங்கள் உழைப்பு திண்ணமாக வீண்போகாது. எதிர்காலத்தில் நீங்கள் அமைச்சராகவும் வரக்கூடும். கரணியம் யாதெனில், நீங்கள் இளைஞர்கள்-தமிழிளைஞர்கள் உள்ளத்தைத்தொடும் வகையில் உணர்வுகளை—மற உணர்வு, விடுதலை உணர்வு, மொழி உணர்வுகளைத் தூண்டும் வகையில் எழுதுகிறீர்கள். நீங்கள் இன்னும் சிறப்பாகப் பாடுபடுங்கள். துணிவாகப் பல உண்மைகளை வெளியிடுங்கள். எதிர்காலம் உங்களுக்கே. எங்கள் துணையும் அன்பும் என்றும் உண்டு. நீங்கள் எழுதும் இதழில் பகுத்தறிவுக் கட்டுரைகள் ஏன் வரவில்லை. கல்லையும் மண்ணையும் கடவுள்

(அடுத்த பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7424

என நம்பும் கூட்டத்திற்குப் பகுத்தறிவு ஊட்டும் முறையில் நீங்கள் ஏன் பாக்களோ கட்டுரைகளோ எழுதவில்லை. நீங்கள் பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவரா? இறை மறுப்புக்கு எதிரானவரா?

பெரியாரின் இறைமறுப்புப் பற்றியும்பார்ப்பனர்கள் போடும் கூச்சல்களைப் பற்றியும் நீங்கள் எழுதினால் என்ன? "இராட்டிரியசுயம் சேவக் சங்க"மும், 'சனசங்க'மும், முகமதிய மதவெறியர்கள் சங்கமும் தமிழ்நாட்டில் தலைகாட்டுகின்றனவே, நீங்கள் அவர்களின் சுவரொட்டிகளையும் விளம்பரங்களையும் பார்க்கவில்லையா? மத எதிர்ப்பு பரவுவதில் நீங்கள் மிகுதியும் பங்குகொள்ள விரும்பவில்லையா? இளைஞர்கள் இன்று குமுகாயப் பொதுவுடைமைக் கொள்கைகளையும், கடவுள் மறுப்புக்கொள்கைகளையும் விழைகிறார்கள். உங்கள் தனித்தமிழிதழில் பகுத்தறிவு பரப்பும் சீரிய கருத்துக் கட்டுரைகளை ஆவலுடன் எதிர் நோக்குகிறேன். மேலும், நீங்கள் தமிழ்நாட்டில் உள்ள திரைப்படக் கலையை விரும்பவில்லையா? நமது தமிழர்கள் ஆண்களும் பெண்களும் மாணவர்களும் குழந்தைகளும் இன்று திரைப்படக்கலையை மிகமிக விழைகிறார்களே? நீங்கள் ஏன் திரைப்படக்கலைக்கு உங்களிதழில் இடம்தரவில்லை? பார்ப்பன ஏடுகள் மிகுதியாக விற்பதற்குத் திரைப்படத் திறனாய்வுகளும் கரணியமாகும். மேலும், திரைப்படக்கலைத்திறனாய்வு பிற்போக்கானதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் திரைப்படத்துறையின் சீர்திருத்தம் புகுத்த உங்கள் அறிவுரைகளைப் படிக்க விரும்புகிறேன். உங்கள் இதழை ஏழை நண்பர்களாகிய நாங்கள் இங்கு விரும்பிப் படிக்கிறோம். நீங்கள் நெடுநாட்கள் வாழ்க. துணிவாக எழுதுக. வணக்கம்.

—தி. நா. அறிவரசு, (அறி. இ.) திண்டிவனம்.

0 206. அன்பிற்கினிய ஐயா!

நலம். விழைவதும் அதே. இத்திங்களுக்கான "தென்மொழி" இதழ்கள் எங்களை வந்தடைந்து விட்டன. நாங்கள் "தென்மொழி" "தமிழ்ச்சிட்டு" விற்பனையை மிகுக்க முயன்று ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். இப்பொழுது இரண்டு இதழ்கட்கும் புதிய பல உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம்.

தமிழின், தமிழனின், தமிழ்நாட்டின் விடுதலைக்கு வித்தூன்றி வரும் தங்களின் மறத் தமிழ்ப்பணிக்குப் "பாசறை" பல்லாற்றானும் உடன்நின்று பணிபுரிய அணியமாயிருக்கிறது. எதிர்காலத் தமிழ்க் குமுகாயம் இப்படித்தான் அமைய வேண்டும் என்றோர் உயரிய இலக்கை நோக்கி நடையிடுகிற நமதுபணி வெற்றிபெறப் போவது உறுதி. அன்று நம்மை மதிக்கப்போகிற அந்த நாட்டை எண்ணி நாம் இன்று இப்பணியைச் செம்மையாய்ச் செய்வோம்; வெல்வோம்.

மொழிப்போர், விடுதலைப்போர் மூண்டனவே இங்கே!
விழிப்பெய்த மாட்டீரோ? தூங்குவீரோ மேலும்! -பாவேந்தர்.

தங்கள்,
இ. பாவாணன்,
"தமிழியக்கப் பாசறை" காரைக்குடி-க.


www.thamizham.net - Free E book No 7424